


தினபூமி
thinaboomi.com








**3-வது முறையாக துருக்கி அதிபராக பதவியேற்று கொண்டார் எர்டோகன்**

...2-ம் பக்கம்

**சுரினாம் மற்றும் செர்பியாவுக்கு 6 நாள் பயணமாக புறப்பட்டு சென்றார் ஜனாதிபதி முர்மு**

...3-ம் பக்கம்

**2024 ஜனவரியில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார் டேவிட் வார்னர்**

...7-ம் பக்கம்





● சென்னையில் நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலினை, அவரது முகாம் அலுவலகத்தில், ஒடிசா சென்று திரும்பிய அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் சந்தித்து, ரயில் விபத்து நடந்த பாலசோரில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள், மீட்புப்பணிகள், மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்படுவது மற்றும் பயணிகள் ரயில் மூலம் சென்னை திரும்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை தெரிவித்தனர்.

### ஒடிசா ரயில் விபத்து:

# உயிர் தப்பிய பயணிகளுடன் சென்னை வந்த சிறப்பு ரயில்

## அமைச்சர்கள் வரவேற்பு

சென்னை, ஜூன். 05-

ஒடிசா மாநிலம், பாலசோரில் ஏற்பட்ட ரயில் விபத்தை தொடர்ந்து நேற்று அதிகாலை 4.30 மணியளவில் ஒடிசாவிலிருந்து சிறப்பு ரயில் மூலம் 137 பயணிகள் சென்னைக்கு வருகை தந்தனர். அவர்களை ரயில் நிலையத்தில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மா.சுப்பிரமணியன், வருவாய் நிர்வாக ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர் பிரபாகர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி ஆகியோர் வரவேற்றனர். பயணிகளுக்கு காலை சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

இவர்களில் 36 பயணிகளுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 34 பயணிகள் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அனுப்பி வைக்கப்பட்டவர்களில் 3 பயணிகள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்ற பயணிகள் சிறு சிகிச்சைக்குப் பிறகு அவர்களது இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தமிழக முதல்வர் உத்தரவிட்டதன் அடிப்படையில், ஒடிசா மாநிலத்திலிருந்து சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு வந்தடைகின்ற பயணிகளுக்கு தேவையான பரிசோதனை மற்றும் மேல் சிகிச்சை மேற்கொள்ள 30 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிக்கென அரசு போக்குவரத்துக் கழகம் மூலம் 7 பேருந்துகளும், காவல் துறை மூலம் 50 டாக்ஸிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. கூடுதலாக 10 அவசரகால ஊர்தியும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ரயில் நிலையத்தில் வீல் சேர், ஸ்டிரெச்சர் வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், வருவாய்த்துறை, சுகாதாரத் துறை அலுவலர்கள், வருகின்ற பயணிகளுக்கு தேவையான உதவிகள் செய்திட பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

# ஒடிசா ரயில் விபத்தில் தமிழகத்தை சேர்ந்த யாரும் உயிரிழக்கவில்லை

## சென்னை திரும்பிய அமைச்சர் உதயநிதி பேட்டி

சென்னை, ஜூன்.5-

கொல்கத்தாவில் இருந்து கடந்த 2-ம் தேதி இரவு சென்னை நோக்கி வந்த கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் ஒடிசா அருகே தடம்புரண்டு விபத்துக்கு உள்ளானது. இந்த கோர விபத்தில் 275 பேர் உயிரிழந்திருப்பதோடு, பலரும் படுகாயம் அடைந்து பல்வேறு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் ஒடிசா சென்றிருந்த அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், சிவசங்கர் மற்றும் அதிகாரிகள் சென்னை திரும்பினர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது,

நேரடியாக மருத்துமனைக்கு சென்று ஆய்வு நடத்தியதில் அங்கு தமிழர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை.

பிணவறைக்கு சென்று பார்வையிட்டோம். அங்கும் தமிழர்கள் யாரும் இல்லை என்று தெரிய வந்தது. பின்னர் அங்கிருந்த அரசு அதிகாரிகளுடன் ஆய்வு நடத்தினோம்.

அவர்களும் எங்கும் தமிழர்கள் பாதிக்கப்படவில்லை என்று தெரிவித்தனர். ரயில் விபத்தில் தமிழகத்தை சேர்ந்த யாரும் உயிரிழக்கவில்லை. 8 பேரின் தகவல் இல்லாமல் இருந்த நிலையில், 3 பேரின் தகவல் கிடைத்துள்ளது. மற்ற 5 பேரும் நலமுடன் உள்ளதாக, அவர்களுடன் உடன் பயணித்த நபர்கள் தகவல் கொடுத்துள்ளனர். இவ்வாறு அமைச்சர் உதயநிதி தெரிவித்தார்.

### ஒடிசா ரயில் விபத்து தொடர்பாக

# சி.பி.ஐ. விசாரணைக்கு ரயில்வே பரிந்துரை

## மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தகவல்

புவனேஷ்வர், ஜூன்.5-

ஒடிசா ரயில் விபத்து தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு ரெயில்வே வாரியம் பரிந்துரை செய்துள்ளதாக மத்திய அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் இருந்து கடந்த 2-ம் தேதி பிற்பகல் 3.20 மணிக்கு புறப்பட்ட ஷாலிமார் - சென்னை சென்ட்ரல் கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில், இரவு 7 மணியளவில் ஒடிசாவின் பாலசோர் - பத்ரக் ரயில் நிலையங்கள் இடையே பாஹாநாகா பஜார் பகுதியில் வந்து கொண்டிருந்தது. அப்போது, பிரதான தண்டவாளத்தில் இருந்து இணைப்பு தண்டவாளத்துக்கு ரயில் மாறியுள்ளது. இணைப்பு தண்டவாளத்தில் ஏற்கெனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்கு ரயில் மீது கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் பயங்கர வேகத்தில் மோதியது.

இதில் சரக்கு ரயிலின் 2 பெட்டிகளை துளைத்து 3-வது பெட்டியின் மீது பயணிகள் ரயிலின் என்ஜின் ஏறியது. மோதிய வேகத்தில், கோரமண்டல் ரயிலின் பல பெட்டிகள் தடம் புரண்டு, 3-வது தண்டவாளத்தின் குறுக்கே விழுந்தன. அப்போது பெங்களூரில் இருந்து ஹவுரா செல்லும் சூப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயில் எதிர்திசையில் அதே பகுதியில் வேகமாக வந்து கொண்டிருந்தது.

அப்போது, தண்டவாளத்தின் குறுக்கே நின்றிருந்த கோரமண்டல் ரயில் பெட்டிகள் மீது பெங்களூர் - ஹவுரா ரயில் பயங்கரமாக மோதி தடம் புரண்டது. இந்த விபத்தில் கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயிலின் 3 பெட்டிகள், பெங்களூர் - ஹவுரா ரயிலின் 2 பெட்டிகள் முற்றிலுமாக உருக்குலைந்தன. 2 பயணிகள் ரயில், ஒரு சரக்கு ரயில் மோதிய பயங்கர விபத்தில் பலி எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வந்தது.

இந்நிலையில், ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழப்பு எண்ணிக்கை 288 இல்லை, 275 தான். சில உடல்கள் இரண்டு முறை எண்ணப்பட்டதால் 288 என்று தவறான எண்ணிக்கை பதிவாகியுள்ளது என ஒடிசா மாநில தலைமைச் செயலாளர் பிரதீப் ஜெனா அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளார்.

மேலும் 88 உடல்கள் அடையாளம் காணப்படட்டுள்ளதாகவும், சிகிச்சை பெற்று வந்த 1,175 பேரில் 793 பேர் குணம் அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார். தொடர்ந்து அந்த பகுதியில் விபத்தில் உருகுலைந்த பெட்டிகள் மற்றும் தண்டவாளங்களை சீரமைக்கும் பணியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபட்டு வந்தனர்.

சீரமைப்பு பணியில் 7 பொக்லைன் இயந்திரங்கள், 140 டன் திறன் கனரக கிரேன் உள்ளிட்ட இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டன.

இந்த நிலையில், பாலசோரில் விபத்து பகுதியில் நடந்து வரும் மீட்பு பணிகளை 2-வது நாளாக மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் நேரில் ஆய்வு செய்தார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது,

கோரமண்டல் ரயில் விபத்தில் அனைத்து சடலங்களும் அகற்றப்பட்டுள்ளது. ரயில் பாதையை சீரமைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. விபத்து நடத்த இடத்தில் வரும் புதன் கிழமைக்குள் சீரமைப்பு பணிகளை முடித்து ரெயில் சேவையை மீண்டும் துவக்க திட்டமிட்டுள்ளோம்.

ஒடிசா ரயில் விபத்துக்கான விபத்துக்கான மூல காரணம் கண்டறியப்பட்டுள்ளது. சம்பவத்திற்கான காரணத்தையும் அதற்கு காரணமானவர்களையும் கண்டறிந்துள்ளோம்.

எலக்ட்ரானிக் இன்டர்லாக் மாற்றத்தால் இந்த சம்பவம் நடந்தது. ரயில் விபத்து தொடர்பாக மேற்கு வங்காள முதல்வர் மம்தா பானர்ஜியின் குற்றச்சாட்டில் உண்மை இல்லை. கவாச் கருவி இருந்திருந்தாலும் விபத்தை தடுத்திருக்க முடியாது என்று கூறினார்.

இந்நிலையில் ஒடிசா ரயில் விபத்து தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு ரெயில்வே வாரியம் பரிந்துரை செய்துள்ளதாக மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

இந்த ரயில் விபத்தில் அனைத்து சடலங்களும் அகற்றப்பட்டுள்ளது.

ஒடிசா ரயில் விபத்து தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு ரெயில்வே வாரியம் பரிந்துரை செய்துள்ளது.

மீட்பு பணிகள் நிறைவடைந்து சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. தண்டவாளம் தொடர்பான பணிகள் முடிந்து மேல்நிலை வயரிங் பணி நடந்து வருகிறது. மருத்துவமனைகளில் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### அக்னி நட்சத்திரம் முடிந்தும் குறையாத வெயிலின் தாக்கம்:

# தமிழகத்தில் பள்ளிகள் திறப்பு மீண்டும் தள்ளி வைக்கப்படுமா?

சென்னை, ஜூன். 05-

தமிழகம் முழுவதும் தற்போது புதிய கல்வி ஆண்டில் பள்ளிக் கூடங்கள் திறப்பிற்கான ஆயத்த பணிகள் நடந்து வருகிறது. இதற்காக மாணவர்களுக்கு தேவையான பாட புத்தகங்கள் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 1 முதல் 5-ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஜூன் 5-ம் தேதியும் 6 முதல் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு ஜூன் 1-ம் தேதியும் பள்ளிகள் திறக்கப்படும் என்று முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் வெயில் வாட்டி வதைப்பதால் பள்ளிகள் திறக்கும் தேதியை தள்ளி வைக்க வேண்டும் என்று அரசுக்கு பல்வேறு கோரிக்கைகள் வந்தது.

அதன் அடிப்படையில் வரும் 7-ம் தேதி பள்ளிக்கூடங்கள் திறக்கப்படும் என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவிப்பு வெளியிட்டார்.

1-ம் தேதிக்கு பதில் 7-ம்தேதி பள்ளிகள் திறக்கப்படும் சமயத்தில் வெயில் குறைந்து விடும் என கணிக்கப்பட்டது.

ஆனால் இப்போது வெயில் குறைவதற்கான அறிகுறியே தென்படவில்லை. தமிழகத்தில் நாளுக்கு நாள் வெப்பம் அதிகரித்து கொண்டே தான் வருகிறது. அக்னி நட்சத்திரம் முடிந்த பிறகும் வெயிலின் உக்கிரம் குறையவில்லை. சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களில் 108 டிகிரிக்கு மேல் வெயில் கொளுத்துகிறது.

இயல்பாக பதிவாகும் வெப்ப அளவை விட கடந்த 4 நாட்களாக வெப்பத்தின் அளவு அதிகமாகவே காணப்படுகிறது.

இதனால் பள்ளிகள் 7-ம் தேதி திறப்பதை மறுபடியும் தள்ளி வைக்க வேண்டும் என்று அரசுக்கு மீண்டும் கோரிக்கைகள் சென்ற வண்ணம் உள்ளது.

எனவே பள்ளிகள் திறப்பது மீண்டும் தள்ளி போகுமா? இல்லையா? என்பது ஓரிரு நாளில் தெரிய வரும்.

# ஒடிசா ரயில் விபத்தில் மே.வங்கத்தை சேர்ந்த 62 பேர் உயிரிழப்பு: மம்தா

கொல்கத்தா, ஜூன்.5-

ஒடிசா ரயில் விபத்தில் மேற்கு வங்கத்தை சேர்ந்த 62 பேர் உயிரிழந்துள்ளதாக மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

கொல் கத் தா வில் இருந்து கடந்த 2-ம் தேதி இரவு சென்னை நோக்கி வந்த கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் ஒடிசா அருகே சரக்கு ரயிலுடன் மோதி தடம்புரண்டு விபத்துக்கு உள்ளானது.

இந்த விபத்தில் பெங்களூரு- ஹவுரா ரயிலும் சிக்கியது. இந்த கோர விபத்தில் 275 பேர் உயிரிழந்திருப்பதோடு, பலரும் படுகாயம் அடைந்து பல்வேறு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து நடந்த பகுதியில் மீட்புப்பணிகள் முடிவடைந்து மறு சீரமைப்பு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், இந்த விபத்தில் மேற்கு வங்கத்தை சேர்ந்த 62 பேர் உயிரிழந்துள்ளதாக மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார். விபத்தில் சிக்கிய 56 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர்;

மேலும் 279 பேர் சிகிச்சையில் உள்ளனர். இன்னும் 182 பேர் அடையாளம் காணப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் 8-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

## சென்னை வானிலை மையம் தகவல்

சென்னை, ஜூன். 06-

தமிழகத்தில் வரும் 8-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-





தென்னிந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி மற்றும் வெப்பசலனம் காரணமாக, இன்று (05.06.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கரூர், நாமக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கன மழை பெய்யவாய்ப்புள்ளது.

நாளை 06-ம் தேதி முதல் 08-ம் தேதி வரை தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேக மூட் டத் து டன் காணப்படும். நகரின் ஒரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை 20-30 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரிரு இடங்களில் இன்று அதிகபட்ச வெப்பநிலை 39 டிகிரி முதல் 41 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும். ஒரிரு இடங்களில் இயல்பிலிருந்து 2 - 3 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| +118.57 | +46.35 |
| பாயிண்ட் 62547.11 | பாயிண்ட் 18534.10 |



**தங்கம்**
1 சவரன் ₹44,640
1 கிராம் ₹5,580



**வெள்ளி**
1 கிலோ ₹77,800
1 கிராம் ₹77.80



**டாலர்** ₹82.40

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



# 3-வது முறையாக துருக்கி அதிபராக பதவியேற்று கொண்டார் எர்டோகன்



**அங்காரா, ஜூன். 05-**

துருக்கியின் அதிபராக எர்டோகன் 3-வது முறையாக நேற்று முன்தினம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

துருக்கி அதிபர் தேர்தல் கடந்த மாதம் 14-ம் தேதி நடைபெற்றது. அதில் யாருக்கும் 50 சதவீதத்தும் மேல் வாக்குகள் கிடைக்காததால் 2-ம் கட்ட தேர்தல் மே மாதம் 28-ம் தேதி நடைபெற்றது.

இதில் எர்டோகனுக்கு 52.18 சதவீத வாக்குகள் கிடைத்தன. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கெமால் கிளிச்தரோக்லுவுக்கு 47.82 சதவீத வாக்குகள் கிடைத்தன. இந்தத் தேர்தல் முடிவுகள் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டன.

இதையடுத்து, 3-வது முறையாக அவர் அதிபர் பொறுப்பை ஏற்றார். ஏற்கெனவே 20 ஆண்டுகள் துருக்கியின் அதிபராகப் பொறுப்பு வகித்துள்ள 69 வயது எர்டோகன், இந்தப் பதவியேற்பின் மூலம் தனது மொத்த பதவி காலத்தை கால் நூற்றாண்டாக நீட்டிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் அரசு இயந்திரங்களை முழுமையாகப் பயன்படுத்தி எர்டோகன் முறைகேட்டில் ஈடுபட்டதாக எதிர்க்கட்சி கூட்டணி வேட்பாளர் கெமால் கிளிச்தரோக்லு குற்றம் சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் மின் கட்டணத்தை உயர்த்தும் முடிவை அரசு கைவிட வேண்டும்

## அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தல்

**சென்னை, ஜூன். 05-**

மின்சாரக் கட்டணத்தை ஜூலை மாதம் முதல் உயர்த்தும் முடிவை மின்சார வாரியம் கைவிட வேண்டும் என்று அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

தமிழ்நாட்டில் நுகர்வோர் விலைக்குறியீடு உயர்வின் அடிப்படையில் மின் கட்டணத்தை உயர்த்த மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி அளித்திருப்பதால், அடுத்த மாதம் முதல் மீண்டும் மின் கட்டணத்தை உயர்த்த மின்சார வாரியம் முடிவு செய்திருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

10 மாதங்களில் மீண்டும் ஒரு மின்கட்டண உயர்வு என்பது மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் ஆகும். மின்சாரக் கட்டண உயர்வால் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளை சொல்லிமாளாது. இத்தகைய சூழலில் மின்சாரக் கட்டணம் மீண்டும் ஒருமுறை உயர்த்தப்பட்டால், வணிகர்கள், சிறு, குறு தொழில் முனைவோர் உள்ளிட்ட அனைவரும் மீள முடியாத பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொள்வார்கள்.

தமிழக வரலாற்றில் 10 மாதங்களில் இரண்டாவது முறையாக மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது இதுவரை நிகழ்ந்ததில்லை. எனவே, மின்சாரக் கட்டணத்தை ஜூலை மாதம் முதல் உயர்த்தும் முடிவை மின்சார வாரியம் கைவிட வேண்டும். இவ்வாறு அதில் கூறி உள்ளார்.

## என்ஜினில் கோளாறு: கொல்கத்தாவுக்கு

# திருப்பிவிடப்பட்ட மத்திய அமைச்சர் பயணித்த விமானம்

**கவுகாத்தி, ஜூன். 05-**

திப்ரூகார் நோக்கி மத்திய அமைச்சர் மற்றும் 2 பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் பயணித்த இண்டிகோ விமான என்ஜினில் திடீரென கோளாறு ஏற்பட்டது. அதை தொடர்ந்து விமானம் திப்ரூகாருக்கு செல்வதற்கு பதிலாக, கவுகாத்தியில் உள்ள லோகப்பிரியா கோபிநாத் பொர்தோலாய் சர்வதேச விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டது. விமானம் கவுகாத்தி விமான நிலையத்தில் தரையிறங்கி உள்ளது. பயணிகள் அனைவரும் நலமுடன் உள்ளனர்.

அசாமின் திப்ரூகார் நோக்கி 6இ2652 என்ற எண் கொண்ட இண்டிகோ விமான நிறுவனத்தின் விமானம் ஒன்று புறப்பட்டு சென்று உள்ளது. அதில், 150 பேர் பயணித்து உள்ளனர். அந்த விமானத்தில், மத்திய பெட்ரோலியம் மற்றும் எரிவாயுவுக்கான இணை அமைச்சர் ரமேஷ்வர் தெளி மற்றும் பிரசந்தா புகான் மற்றும் தெராஷ் கோவல்லா ஆகிய பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் 2 பேரும் பயணம் செய்து உள்ளனர்.

இந்த நிலையில், விமானத்தில் நடுவழியில் திடீரென என்ஜினில் கோளாறு ஏற்பட்டு உள்ளது. இதனை விமானி பயணிகளிடம் அறிவித்து உள்ளார். இதனால், விமானம் திப்ரூகாருக்கு செல்வதற்கு பதிலாக, கவுகாத்தியில் உள்ள லோகப்பிரியா கோபிநாத் பொர்தோலாய் சர்வதேச விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டு உள்ளது.

இதன்பின்னர், விமானம் கவுகாத்தி விமான நிலையத்தில் தரையிறங்கி உள்ளது. பயணிகள் அனைவரும் நலமுடன் உள்ளனர். இது பற்றி மத்திய இணை அமைச்சர் தெளி கூறும்போது,

நாங்கள் விமானத்தில் இருந்த போது, 15 முதல் 20 நிமிடங்கள் வரை நடுவானிலேயே விமானம் சுற்றி வந்தது. அதன்பின்னர், கவுகாத்தி விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டது. நாங்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்கிறோம் என கூறியுள்ளார்.

# ஒடிசா ரயில் விபத்து: அமெரிக்க அதிபர் ஜோபைடன் இரங்கல்

**வாஷிங்டன், ஜூன். 05-**

ஒடிசா ரயில் விபத்துக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஒடிசா மாநிலம் பாலசோர் மாவட்டத்தில் 3 ரயில்கள் அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளாகின. இந்த கோர விபத்தில் சிக்கி இது வரை 275 பயணிகள் உயிரிழந்துள்ளதாகவும், 900 பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அந்த பகுதியில் விபத்தில் உருக்குலைந்த பெட்டிகளை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த விபத்து சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்திருந்தனர். குறிப்பாக ரஷ்ய அதிபர் புடின், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் பிரதமர் இமானுவேல் மேக்ரான், ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் உள்ளிட்ட பல தலைவர்கள் இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளனர். மேலும் இந்த கடினமான நேரத்தில் இந்தியாவுடன் துணை நிற்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த நிலையில், ஒடிசா ரயில் விபத்துக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஒடிசா ரயில் விபத்து செய்தியை அறிந்ததும் இதயமே நொறுங்கி விட்டது. விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன்.

பாதிக்கப்பட்டவர் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். இந்த வருத்தமான சூழ்நிலையில் இந்தியர்களுடன் அமெரிக்க மக்கள் துணை நிற்பதாக அந்த இரங்கல் செய்தியில் ஜோபைடன் தெரிவித்துள்ளார்.

## ஒடிசா ரயில் விபத்து: காரக்பூரில் இன்று

# ரயில்வே பாதுகாப்பு ஆணையர் விசாரணை

**புவனேஷ்வர், ஜூன். 05-**

ஒடிசா ரயில் விபத்து தொடர்பாக இன்று காரக்பூரில் தென் கிழக்கு வட்டத்தின் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் விசாரணை நடத்த உள்ளார். காரக்பூரில் தொடங்கும் இந்த விசாரணை இரண்டு நாட்களுக்கு நடைபெற உள்ளது.

இதுதொடர்பாக இந்தியன் ரெயில்வே வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

ஒடிசாவில் பாலசோர் அருகே நிகழ்ந்த ரயில் விபத்து தொடர்பாக காரக்பூரில் உள்ள சவுத் இன்ஸ்டிடியூட்டில் இன்று 5-ம் தேதி மற்றும் 6-ம் தேதி தேதிகளில் தென்கிழக்கு வட்டத்தின் ரெயில்வே பாதுகாப்பு ஆணையர் சட்டப்பூர்வ விசாரணையை நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிலரது உடல்கள் இருமுறை எண்ணப்பட்டதால்

# ரயில் விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 288 அல்ல - 275தான்

## ஒடிசா தலைமை செயலாளர் அதிகாரபூர்வ அறிவிப்பு

**புவனேஷ்வர், ஜூன். 05-**

ஒடிசா ரயில் விபத்து சம்பவத்தில் சிலரது உடல்கள் 2 முறை எண்ணப்பட்டு விட்டதாகவும் ரயில் விபத்தில் பலியானவர்கள் எண்ணிக்கை 288 அல்ல, 275தான் என ஒடிசா அரசு அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.

மேற்கு வங்காளத்தின் கொல்கத்தா அருகே உள்ள ஷாலிமாரில் இருந்து சென்னை சென்டிரலுக்கு வந்து கொண்டிருந்த கோரமண்டல் எக்ஸ்பிரஸ், பெங்களூருவில் இருந்து ஹவுரா சென்று கொண்டிருந்த எக்ஸ்பிரஸ் ரயில் மற்றும் ஒரு சரக்கு ரயில் என 3 ரயில்கள் ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தின் பகனகா பஜார் ரயில் நிலையம் அருகே கடந்த 2-ம் தேதி இரவு சுமார் 7 மணியளவில் விபத்தில் சிக்கின. இந்த திடீர் விபத்தால், ரயில் பெட்டிகள் ஒன்றுக்கொன்று மோதி உருக்குலைந்தன.

விபத்தில் சிக்கிய 3 ரயில்களில் 2 ரயில்கள் பயணிகள் ரயில் என்பதால், ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் இடிபாடுகளில் சிக்கினார்கள். இதில் பலர் சம்பவ இடத்திலேயே அடுத்தடுத்து உயிரிழந்தனர் இந்த விபத்தில் பலியானவர்கள் எண்ணிக்கை 288 என்று நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், இறந்தவர்கள் எண்ணிக்கை 288 அல்ல என்றும் 275 தான் எனவும் ஒடிசா அரசு விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாக ஒடிசா அரசு தலைமை செயலாளர் பிரதீப் ஜெனா கூறியதாவது:

ரயில் விபத்தில் பலியானவர்கள் எண்ணிக்கை 275 ஆகும். 288 கிடையாது. மாவட்ட மாஜிஸ்திரேட் தரவுகளை சரிபார்த்ததில் சில உடல்கள் இருமுறை எண்ணப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 275 ஆக குறைக்கப்பட்டுள்ளது. 88 உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. காயம் அடைந்து சிகிச்சை பெற்று வந்த 1,175 பேரில் 793 பேர் குணம் அடைந்துள்ளனர் என்று தெரிவித்தார்.

# லிபியா போராளிகள் சிறைப்பிடித்த இந்திய மாலுமிகள் 9 பேர் விடுவிப்பு

**திரிபோலி, ஜூன். 05-**

லிபியா கிளர்ச்சி குழுவால் சிறைபிடிக்கப்பட்ட 9 இந்திய மாலுமிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.


கிரீஸ் நாட்டை சேர்ந்த நிறுவனத்திற்கு சொந்தமான எம்.டி.மாயா-1 என்ற வணிக கப்பல் ஒன்று பெட்ரோலிய பொருட்களை ஏற்றிக் கொண்டு மால்டாவில் இருந்து லிபியா நாட்டு தலைநகர் திரிபோலிக்கு கடந்த பிப்ரவரி மாதம் சென்றது. கப்பலில் இந்தியாவை சேர்ந்த 9 மாலுமிகள் உள்பட பலர் இருந்தனர்.

அந்த கப்பல், லிபியாவின் கடற்கரைக்கு அருகே வந்த போது நடுக்கடலில் பழுதடைந்தது. அப்போது கப்பலில் இருந்தவர்களை லிபியா உள்ளூர் போராளிகள் சிறைபிடித்தனர். இந்திய மாலுமிகளை மீட்பதற்கான நடவடிக்கைகளில் இந்திய அரசு ஈடுபட்டது. வெளியுறவு அமைச்சகமும், இந்திய தூதரகமும் லிபியாவில் உள்ள அதிகாரிகளை தொடர்பு கொண்டு இந்திய மாலுமிகளை மீட்பதற்கான ஆலோசனையில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் லிபியா கிளர்ச்சி குழுவால் சிறைபிடிக்கப்பட்ட 9 இந்திய மாலுமிகள் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் லிபியா தலைநகர் திரிபோலிக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு அவர்களை துணிசியாவுக்கான இந்திய தூதர் வரவேற்றார். மீட்கப்பட்ட 9 பேரும் விசா நடைமுறைகள் முடியும் வரை திரிபோலியில் உள்ள ஓட்டலில் தங்க வைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மாலுமிகளில் 5 பேர் உத்தரபிரதேசத்தை சேர்ந்தவர்கள். மற்றவர்கள் ராஜஸ்தான், மேற்கு வங்காளம், இமாச்சல பிரதேசம், குஜராத்தை சேர்ந்த தலா ஒருவர் ஆவர்.

**05-06-2023**




**மேஷம்:-** தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். அன்னதானம் போன்ற நற் காரியங்களில் ஈடுபடுவீர்கள். நல்ல மனைவி அமைவாள். புனிதப் பயணங்கள் மூலம் புண்ணியம் சேரும்.

**ரிஷபம்:-** மனைவி/கணவனின் மனம் அறிந்து செயல்பட்டால் கருத்து வேறுபாடுகளை தவிர்க்கலாம். எந்தச் செயலையும் அவசரமின்றி நிதானமாகச் செய்தால் வெற்றி நிச்சயம்.

**மிதுனம்:-** வாக்கு சாதுரியத்தால் வருமானம் பெருகும். அரசால் ஆதாயம் உண்டு. புதிய தொழில்கள் தொடங்க சாதகமான சூழ்நிலை அமையும். தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**கடகம்:-** விரும்பிய காரியங்கள் விரும்பியபடி நடக்கும். விருந்தினர் வருகையால் மனம் மகிழும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். பயணம் சுகப்படும்.

**சிம்மம்:-** முனைப்புக் காட்டும் முயற்சிகள் வெற்றி பெறும். தொழில் ஆர்வம் கூடினால் தான் ஆதாயத்தை எதிர்பார்க்கலாம். சிலருக்கு தேவையற்ற கவலைகள் எழும்.

**கன்னி:-** பெற்றோர்களின் மூலம் சகாயம் அடைவீர்கள். மண வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். அன்னையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தன்னம்பிக்கை இழக்காதீர்கள்.

**துலாம்:-** வியாபாரத்தில் ஏற்பட்ட அதிக வருமானத்தால் பொருளாதாரம் மேம்படும். கல்வியில் வெற்றி பெற கடின உழைப்பு தேவை. இனிய பேச்சால் பெண்களை கவர்வர்.

**விருச்சிகம்:-** இன்று, உணவு விஷயத்தில் கூட திருப்தி இருக்காது. மனதில் நிம்மதி அற்ற நிலை உருவாகும். கல்வியில் வெற்றி கிட்டாத நிலையில் மகிழ்ச்சி குறையும்.

**தனுசு:-** மணவாழ்க்கை மணக்கும். தனவரவு மனத்திருப்தி ஏற்படும். ஆராய்ச்சியும், தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.

**மகரம்:-** இடமாற்றம் ஏற்படலாம். நஷ்டங்களை தவிர்க்க வியாபாரத்தில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. எதிலும் ஆராய்ந்து செயல்களில் இறங்க வேண்டிய நாள்.

**கும்பம்:-** பெண்கள் மூலம் தன லாபம் அடைவீர்கள். பிரிந்தவர் கூடிப் பேரின்பம் அடைவர். மாணவர்களுக்கு கல்வியில், வியாபாரிகளுக்கு தொழிலில் வெற்றி கிட்டும்.

**மீனம்:-** வியாபார விரிவாக்கத் திட்டங்கள் முன்னேற்றம் தரும். அதன் காரணமாக தன வரவு கூடும். எடுத்த காரியங்கள் எல்லாம் கை கூடும். அரசாங்கத்தால் ஆதாயம் கிடைக்கும்.

# ரயில் நிலைய வளாகங்களில் கழிவுகளை வீச வேண்டாம்

## பயணிகளுக்கு கோட்ட மேலாளர் வேண்டுகோள்

**நெல்லை. ஜூன்.05.**

ரயில்கள் மற்றும் ரயில் நிலைய வளாகங்களை சுத்தமாக வைத்திருக்கும் முயற்சியில் ரயில்வேக்கு ஆதரவளிக்குமாறு கோட்ட ரயில்வே மேலாளர் ஸ்ரீ பி.ஆனந்த் பயணிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ரயில் நிலையங்களில் காணக்கூடிய சுத்தமான சுற்றுப்புறச் சூழலுக்கு முக்கியக் காரணம், ரயில் நிலையங்களில் இதற்காக வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் மட்டுமே கழிவுகளை அகற்றுவதில் பயணிகள் காட்டும் விழிப்புணர்வாக இருக்கலாம். குப்பைத்தொட்டிகளில் கழிவுகளை வைப்பது நிலையத்தின் தூய்மைக்கு உதவுவது மட்டுமல்லாமல், அத்தகைய கழிவுகளை எளிதில் பிரித்து அகற்றுவதற்கும் வழி வகுத்து, அதன் மூலம் பாதுகாப்பு ஊழியர்களின் பணியை எளிதாக்குகிறது.

பயணிகள் பயணிக்கும் போதோ அல்லது ரயில் நிலையங்களில் நிற்கும் போதோ அத்தகைய அக்கறை காட்டப்படுவதில்லை. அலுமினியத் தகடு கொள்கலன்களுடன் கூடிய காகிதக் கோப்பைகள் மற்றும் உணவுக் கழிவுகள் ரயில்கள் மற்றும் நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படுவதைக் காணலாம், ரயில் நிலையங்கள் மற்றும் யார்டுகளை அழுக்காகவும், அசுத்தமாகவும் மாற்றுகிறது. இவ்வாறு தூக்கி எறியப்படும் கழிவுகள் பெரும்பாலும் திறந்தவெளி வடிகால்களில் விழுந்து, வடிகால் அமைப்பை அடைத்து, பாதுகாப்பு ஊழியர்களுக்கு கூடுதல் பணியை கட்டாயப்படுத்துகிறது.

அதுமட்டுமின்றி, கன்டெய்னர்கள், கேரி பேக்குகள் போன்ற பிளாஸ்டிக் மற்றும் உலோகப் பொருட்கள் ரயில் இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் அதிக உணர்திறன் சிக்னல் இன்டர்லாக் சிஸ்டத்துடன் தொடர்பு கொள்வது, அமைப்பின் பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மையைப் பாதிக்கலாம். இந்தச் சூழலில் ரயில் பெட்டிகளுக்குள் வழங்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளைப் பயன்படுத்துமாறு பயணிகளை டி.ஆர்.எம் கேட்டுக்கொள்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பயங்கரவாதிகள் தாக்குதலில் 54 உகாண்டா வீரர்கள் பலி

**மஹாதிசு, ஜூன். 05-**

சோமாலியாவில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 54 உகாண்டா ராணுவ வீரர்கள் பலியாயினர்.

சோமாலியாவில் அல்-ஷபாப் பயங்கரவாத அமைப்பினர் அரசுக்கு எதிராக அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள். அவர்களை ஒடுக்க ராணுவம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் உகாண்டா நாட்டை சேர்ந்த அமைதி படையும் சோமாலியாவில் தீவிர வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நிலையில் சோமாலியா தலைநகர் மொகடிஷூவில் இருந்து தென்மேற்கே 130 கி.மீ. தொலைவில் உள்ள புலமாரில் உள்ள பாதுகாப்பு படை தளத்தை குறி வைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து ராணுவத்தினரும் எதிர் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 54 உகாண்டா வீரர்கள் பலியானார்கள்.

இது தொடர்பாக உகாண்டா அதிபர் யோவேரி முசெவேனி கூறும் போது,

சோமாலியாவில் உள்ள ராணுவ தளத்தில் அல்-ஷபாப் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 54 உகாண்டா அமைதிப்படை வீரர்கள் உயிரிழந்தனர். எங்களது வீரர்கள் கடுமையான போராடி ராணுவ தளத்தை மீண்டும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்றார். இதற்கிடையே ராணுவ தளத்தில் தற்கொலை குண்டு தாக்குதல்கள் நடத்தியதாகவும், 137 வீரர்களை கொன்றதாகவும் அல்-ஷபாப் பயங்கரவாத அமைப்பு தெரிவித்துள்ளது.

# ரயில் விபத்து மீட்பு பணியின் போது கண்டெடுக்கப்பட்ட காதல் கடிதங்கள்

**புவனேஸ்வர், ஜூன். 05-**

ஒடிசா ரயில் விபத்து சம்பவத்தை தொடர்ந்து மீட்பு பணியின் போது கண்டெடுக்கப்பட்ட நோட்டு புத்தகத்தில் அனைத்தும் காதல் கவிதைகள் இடம்பெற்று இருந்தது.

ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தின் பகனகா பஜார் ரயில் நிலையம் அருகே விபத்து நடந்த இடத்தில் சிதறிக் கிடந்த பொருட்கள் ஒவ்வொன்றும் பல இதயங்களின் வலியையும், ஏக்கத்தையும் பிரதிபலிப்பதாக உள்ளது. அந்த வகையில், மீட்பு பணியின் போது தண்டவாளத்தின் சில அடி தூரத்துக்குள் ஒரு பயணியின் பை கிடைத்தது.

அதில் ஒரு நோட் புக் இருந்தது. அதை பிரித்து பார்த்த போது மீட்பு குழுவினர் கண்களில் வேதனை கலந்த கண்ணீர் கசிந்தது. ஏனெனில் அந்த நோட்டு புத்தகத்தில் இடம்பெற்று இருந்தது அனைத்தும் காதல் கவிதைகள்.

சிவப்பு, நீலம், பச்சை என்று பல வண்ணங்களை கவிதையாக வடித்து இருந்தார். வங்காள மொழியில் எழுதப்பட்டிருந்த கவிதைகள் ஒவ்வொன்றும் காதலையும், காதலின் ஏக்கத்தையும் வெளிப்படுத்தியது.

சிறிய மேகங்கள் மழையை உருவாக்குகின்றன. சிறிய கதைகள் அன்பை உருவாக்குகின்றன என்று அந்த கடிதங்கள் நீள்கிறது. எழுதியவர் யார்? அவர் என்ன ஆனார்? என்பது தெரியவில்லை.

மேலும் குழந்தைகளுக்காக ஆசையாக வாங்கி வைத்திருந்த பொம்மைகள், உடைகள் சிதறி கிடந்தன.

கிழிந்தும், சிதைந்தும் கிடந்த அவற்றின் மீது ரத்த கறைகள் படிந்து காணப்பட்டன. சிதறி கிடந்த பயணிகளின் உடைமைகளை தன்னார்வலர்கள் சேகரித்து ஆங்காங்கே குவித்து வைத்துள்ளனர். இதனை மிகுந்த சோகத்தில் அப்பகுதி மக்கள் பார்த்து செல்கின்றனர்.

# ஆசியா - பசிபிக் பகுதியில் நேட்டோ போன்ற அமைப்பை உருவாக்க கூடாது

## சீனா கடும் எச்சரிக்கை

**பெய்ஜிங், ஜூன். 05-**

ஆசியா-பசிபிக் பகுதியில் நேட்டோ போன்ற அமைப்பை உருவாக்க முயற்சிக்கக் கூடாது என்று சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இணைந்து நேட்டோ ராணுவ அமைப்பை உருவாக்கி செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையில் ஆசியா-பசிபிக் பகுதியில் நேட்டோ போன்ற அமைப்பை உருவாக்க முயற்சிக்கக் கூடாது என்று சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக சிங்கப்பூரில் நடந்த பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்ற சீன பாதுகாப்பு மந்திரி லீ ஷங்பூ கூறும் போது,

ஆசிய-பசிபிக்கில் நேட்டோ போன்ற முயற்சிகள் பிராந்திய நாடுகளில் மோதல்களை பெரிதுப்படுத்துவதற்கான ஒரு வழியாகும். இது ஆசிய - பசிபிக்கை சர்ச்சைகள் மற்றும் மோதல்களின் சுழலில் மட்டுமே மூழ்கடிக்கும்.

இன்றைய ஆசிய-பசிபிக் பகுதிக்கு திறந்த மற்றும் உள்ளடக்கிய ஒத்துழைப்பு தேவை. அனைத்து நாடுகளின் மக்களும் இரண்டு உலக போர்கள் கொண்டு வந்த கடுமையான பேரழிவுகளை மறந்து விடக்கூடாது. இது போன்ற சோகமான வரலாறு மீண்டும் வருவதை நாம் அனுமதிக்கக் கூடாது என்றார்.

தென்சீன கடல் பகுதியில் சீன ஆதிக்கம் செலுத்த முயற்சித்து வருகிறது. தைவானை தனது நாட்டின் ஒரு பகுதி என்று சீனா கூறி வருகிறது. இதற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்து தைவானுக்கு ஆதரவாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

ரயில் விபத்து: சிகிச்சை பெற்றவர்கள் ஊர் திரும்ப

# சென்னை உள்பட 5 நகரங்களில் இருந்து சிறப்பு ரயில்கள்: மத்திய அமைச்சர்

**பாலசோர், ஜூன். 05-**

ஒடிசா ரயில் விபத்தில் சிக்கி, சிகிச்சை பெற்றவர்கள் ஊர் திரும்ப வசதியாக சென்னை, பெங்களூரு உள்பட 5 நகரங்களில் இருந்து சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன என்று மத்திய அமைச்சர் தெரிவித்தார்.

ஒடிசா மாநிலம் பாலசோர் மாவட்டத்தில் கடந்த 2-ம் தேதி நிகழ்ந்த ரயில் விபத்தில் 275 பேர் உயிரிழந்தனர். ரயில் விபத்தில் மீட்பு பணிகள் முடிந்து, மறுசீரமைப்பு பணிகள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

சோரோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் மற்றும் மருத்துவர்களை நேரில் சந்தித்தோம். நோயாளிகள் சிகிச்சை பெற்ற பின்னர் அவர்கள் தங்களது சொந்த ஊருக்கு திரும்ப வசதியாக சென்னை, ஐதராபாத், பெங்களூரு, ராஞ்சி, கொல்கத்தா மற்றும் பிற இடங்களில் இருந்து சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன. இதனால் அவர்கள் சிரமமின்றி தங்களுடைய வீடுகளுக்கு செல்ல முடியும் என தெரிவித்தார்.

இதேபோன்று, மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் செய்தியாளர்களிடம் கூறுகையில், இந்த ரயில் விபத்துக்கு காரணமான நபர்கள் மீது மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று தெரிவித்தார்.

# மீட்புப் பணிகளில் ஈடுபட்டோருக்கு பிரதமர் மோடி டுவிட்டரில் பாராட்டு

**புது டெல்லி, ஜூன். 05-**

ஒடிசா ரயில் விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணி முடிந்தது. சீரமைப்புப் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இந்நிலையில் மீட்புக்குழுவினருக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் மோடி வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில்,

துன்பத்திலும் மக்களின் தைரியம் ஊக்கமளிக்கிறது. துன்பங்களை எதிர்கொண்டாலும் நமது தேசத்தின் மக்கள் காட்டிய தைரியமும் கருணையும் ஊக்கமளிக்கிறது. விபத்து நடந்தவுடன் ஏராளமான மக்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். ரத்த தானம் செய்ய வரிசையில் நின்றனர்.

மீட்புப் பணிகளை வலுப்படுத்திய பேரிடர் மீட்புக்குழு, காவல்துறை, தன்னார்வலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பாராட்டுக்கள். இரங்கல் தெரிவித்த உலகத் தலைவர்களின் வார்த்தைகள் துயரில் இருக்கும் குடும்பங்களுக்கு வலிமை தரும். உலகத் தலைவர்கள் அளித்த ஆதரவிற்கும் நன்றி என பதிவிட்டுள்ளார்.

சுரினாம் மற்றும் செர்பியாவுக்கு

# 6 நாள் பயணமாக புறப்பட்டு சென்றார் ஜனாதிபதி முர்மு



**புது டெல்லி, ஜூன். 05-**

ஜனாதிபதி திரவுபதி முர்மு 6 நாள் பயணமாக சுரினாம் மற்றும் செர்பியா புறப்பட்டு சென்றார்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு, தனது பயணத்தின் முதல் கட்டமாக வரும் 6-ம் தேதி வரை தென் அமெரிக்க நாடான சுரினாமில் பயணம் செய்கிறார். சுரினாமில் இருந்து அவர் வரும் 7-ம் தேதி முதல் 9-ம் தேதி வரை தனது பயணத்தின் இரண்டாவது கட்டமாக ஐரோப்பாவில் உள்ள செர்பியாவுக்குச் செல்கிறார்.

சுரினாம் அதிபர் சான் சந்தோகி அழைப்பின் பேரில் நேற்று முதல் 6-ம் தேதி வரை ஜனாதிபதி சுரினாமில் அரசு முறைப் பயணம் மேற்கொள்கிறார். சுரினாமுக்கு இந்தியர்கள் வருகை தந்ததன் 150-வது ஆண்டு விழாவில் ஜனாதிபதி பிரதம விருந்தினராக கலந்து கொள்வதால் இந்த விஜயம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு அவரது முதல் ஐரோப்பிய பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட ஒத்துழைப்பு தர வேண்டும்: அமித் ஷா



**புது டெல்லி, ஜூன். 05-**

மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டுமென அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

மணிப்பூரில் இரு சமூகத்தினருக்கு இடையே ஏற்பட்ட கலவரத்தில் பலர் உயிரிழந்தனர். கலவரக்காரர்களை அடக்க இந்திய ராணுவம் மற்றும் துணை ராணுவ படைகள் கூடுதலாக குவிக்கப்பட்டன. இதனிடையே வன்முறை பற்றி முதல்வர் பைரன் சிங்கிடம், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தொலைபேசி வழியே கேட்டறிந்தார். இதனை தொடர்ந்து கடந்த திங்கட்கிழமை மணிப்பூருக்கு நேரில் சென்ற அமித்ஷா, தலைநகர் இம்பால், காங்போக்பி, மோரே, சுராசந்த்பூர் உள்ளிட்ட நகரங்களில் நிவாரண முகாம்களை பார்வையிட்டார். இதன்பின், குகி, மெய்தய் உள்ளிட்ட சமூக உறுப்பினர்களை நேரில் சந்தித்து பேசினார். தொடர்ந்து பாதுகாப்பு படையினருடன் சந்திப்பை நடத்தினார்.

இந்த நிலையில், மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட மக்கள் ஒத்துழைப்பு தரவேண்டுமென அமித் ஷா வலியுறுத்தியுள்ளார். மேலும், இம்பால் - திமாபூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள தடுப்புகளை அகற்ற அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். தடுப்புகளை அகற்றினால்தான் காய்கறிகள், மருந்துகள், பெட்ரோல், டீசல் மக்களுக்கு சென்றடையும் என்று அவர் தெரிவித்துள்ளார். மேலும், அனைவரும் ஒன்றிணைந்தால் தான் மாநிலத்தில் மீண்டும் அமைதியை நிலைநாட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வரும் 7-ம் தேதி கருணாநிதி நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெறும்

## தி.மு.க. தலைமை கழகம் அறிவிப்பு

**சென்னை, ஜூன். 05-**

ஒடிசா ரயில் விபத்து காரணமாக ஒத்திவைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் 7-ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 100-வது பிறந்தநாள் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. மேலும் 3-ம் தேதி (நேற்று) மாலை 6 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தலைவர்கள் பங்கேற்கும் கலைஞர் நூற்றாண்டு விழா பிரமாண்ட பொதுக்கூட்டம் வடசென்னை புளியந்தோப்பு பின்னி மில் மைதானத்தில் நடக்க இருந்தது. ஒடிசா ரயில் விபத்தை தொடர்ந்து இந்த பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், ஒடிசா ரயில் விபத்து காரணமாக ஒத்திவைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டம் 7-ம் தேதி நடைபெறும் என தி.மு.க. தலைமை அறிவித்துள்ளது.

ஒடிசா ரயில் விபத்து காரணமாக ஒத்திவைக்கப்பட்ட நிலையில் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

கருணாநிதியின் 100-வது பிறந்த நாள் என்பதால் ஆண்டு முழுவதும் நூற்றாண்டு விழாவாக கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. தமிழக அரசு தரப்பிலும், தி.மு.க. கட்சி சார்பிலும் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அவரது நூற்றாண்டு விழாவையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன. இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைச்சர்கள் தலைமையில் விழாக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

# காயிதே மில்லத்தின் 128-வது பிறந்த நாள்:

# சென்னையில் உள்ள நினைவிடத்தில் இன்று ஜே.சி.டி.பிரபாகர் மரியாதை செலுத்துகிறார்

## ஓ. பன்னீர் செல்வம் அறிவிப்பு



**சென்னை, ஜூன். 05-**

காயிதே மில்லத்தின் 128-வது பிறந்த நாளையொட்டி சென்னை திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை வாலாஜா பெரிய மசூதி வளாகத்தில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் இன்று முன்னாள் எம்.எல்.ஏ. ஜே.சி.டி. பிரபாகர் மலர் போர்வை போர்த்தி மரியாதை செலுத்துகிறார். நிர்வாகிகள் இந்நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டும் என்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

இந்திய விடுதலை போராட்ட வீரரும், இந்திய அரசியலமைப்பு நிர்ணய மன்ற உறுப்பினராக பணியாற்றியவரும், சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினர், மக்களவை உறுப்பினர் மற்றும் மாநிலங்களவை உறுப்பினர் பதவிகளை வகித்தவரும், கட்சி வித்தியாசமின்றி அனைத்து கட்சி தலைவர்களுடனும் நட்புறவு கொண்டவரும், இஸ்லாமிய சமுதாயத்தின் முதுபெரும் தலைவருமான கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் சாஹிப்பின் 128-வது பிறந்த நாளான இன்று 5-ம் தேதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் சென்னை திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை வாலாஜா பெரிய மசூதி வளாகத்தில் அமைந்துள்ள கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத்தின் நினைவிடத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. ஜே.சி.டி. பிரபாகர் மலர் போர்வை போர்த்தி மரியாதை செலுத்துகிறார்.

மேற்படி நிகழ்ச்சியில் சென்னை மாவட்டத்தை சேர்ந்த நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

ஒடிசா அரசு மேற்கொண்டு வரும்

# மீட்பு பணி நம்பிக்கை தருவதாக அமைந்துள்ளது: அமைச்சர் உதயநிதி

**புவனேஷ்வர், ஜூன். 05-**

ஒடிசா அரசு மேற்கொண்டு வரும் மீட்பு பணி நம்பிக்கை தருவதாக அமைந்துள்ளதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

ஒடிசா ரயில் விபத்தில் 275 பேர் பலியானதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒடிசாவில் சிகிச்சையில் உள்ளவர்கள், வீடு திரும்பியோரின் விவரங்களை கேட்டறிந்ததாக அமைச்சர் உதயநிதி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது, முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி, அமைச்சர் சிவசங்கர் உள்ளிட்ட குழுவினருடன் இரண்டாவது நாளாக நேற்று ஒடிசா ரயில் விபத்து மீட்பு பணி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம்.

புவனேஸ்வர் ராஜீவ் பவனிலுள்ள ஒடிசா சிறப்பு மீட்பு ஆணையர் அலுவலகத்தில், அம்மாநில தலைமைச் செயலாளர் பிரதீப் ஜெனா உள்ளிட்ட அதிகாரிகளுடனான உயர்நிலை ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்று, படுகாயமுற்று சிகிச்சையில் உள்ளவர்கள், சிகிச்சை முடித்து திரும்பியோரின் விவரங்களை கேட்டறிந்தோம்.

ஒடிசா அரசு மேற்கொண்டுவரும் மீட்பு பணி நடவடிக்கைகள் நம்பிக்கையையும், ஆறுதலையும் தருவதாக அமைந்துள்ளது. இவ்வாறு அந்த பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# ஒடிசா ரயில் விபத்து: உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம்

## ஜெகன் மோகன் ரெட்டி அறிவிப்பு



**அமராவதி, ஜூன். 05-**

ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 10 லட்சம் நிதியுதவியினை ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி அறிவித்துள்ளார்.

ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தின் பகனகா பஜார் ரயில் நிலையம் அருகே கடந்த 2-ம் தேதி 3 ரயில்கள் மோதிய விபத்தில் 275 பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில் ஒடிசா ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் நிதியுதவியினை ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி அறிவித்துள்ளார். அதன்படி ரயில் விபத்தில் உயிரிழந்த குருமூர்த்தியின் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்க அதிகாரிகளுக்கு ஆந்திர முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி உத்தரவிட்டுள்ளார். அதேநேரம், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ரூ. 5 லட்சமும், லேசான காயம் அடைந்தவர்களுக்கு ரூ. ஒரு லட்சமும் இழப்பீடு வழங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய உதவித்தொகையுடன் கூடுதலாக இந்த இழப்பீடு வழங்க முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டி உத்தரவு பிறப்பித்துள்ளார்

ஒடிசா விபத்து: சீரமைப்பு பணி காரணமாக

# 95 தென்கிழக்கு ரயில்கள் ரத்து: மாற்று வழியில் 45 ரயில்கள்

**புவனேஸ்வர், ஜூன். 05-**

ஒடிசாவில் கோரமண்டல் விரைவு ரயில் விபத்தை தொடர்ந்து சீரமைப்பு பணிகள் காரணமாக தென்கிழக்கு ரயில்வே பிராந்தியத்தில் 95 ரயில்களின் பயணம் நேற்று ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் 45 ரயில்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டுள்ளன.

ஒடிசா மாநிலம் பாலாசோர் மாவட்டத்திலுள்ள பஜார் ரயில் நிலையம் மூன்று ரயில்கள் கடந்த 2-ம் தேதி ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளானது. ஹவுராவில் இருந்து சென்னை நோக்கி வந்த கோரமண்டல் விரைவு ரயில், ஒடிசாவின் பாலசோர் மாவட்டத்தில் நின்று கொண்டிருந்த சரக்கு ரயிலுடனும், பெங்களூரு - ஹவுரா ரயில் மீதும் மோதி விபத்துக்குள்ளானது.

பஹாநகர் பஜார் பகுதியில் சரக்கு ரயில் நிறுத்தப்பட்டிருந்த தண்டவாளத்தில் கோரமண்டல் ரயில் நுழைந்து, சரக்கு ரயிலின் மீது மோதியது. இதில் கோரமண்டல் ரயிலின் பெட்டிகள் தடம்புரண்டன. அவை, சரக்கு ரயில் மீதும், அருகில் இருந்த மற்றொரு தண்டவாளத்திலும் சிதறி விழுந்தன.

அப்போது, அந்த தண்டவாளத்தில் எதிர்த்திசையில் வந்த பெங்களூரு -ஹவுரா விரைவு ரயில், அந்தப் பெட்டிகள் மோதி தடம்புரண்டு கோர விபத்து நேர்ந்துள்ளது. 3 ரயில்கள் ஒன்றோடொன்று மோதிய விபத்தில் 275 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலாசோர் வழித்தடத்தில் ரயில் பெட்டிகளை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆயிரத்துக்கும் அதிகமான ரயில்வே ஊழியர்கள், 7 பொக்லைன் இயந்திரங்கள், 2 விபத்து மீட்பு ரயில், 4 ரயில்வே கிரேன்கள் ஆகியவைகொண்டு சீரமைப்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இந்த சீரமைப்புப் பணிகள் காரணமாக தென்கிழக்கு பிராந்தியத்தில் 95 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. 45 ரயில்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டுள்ளன.

# சென்னை - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில்

# லாரி மீது கார் மோதிய விபத்தில் ஒரே குடும்பத்தில் 5 பேர் பலி

**காஞ்சிபுரம், ஜூன். 05-**

சென்னை - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் லாரி மீது கார் மோதிய விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் பலியான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தாலுகா, செ.நாச்சிபட்டு பகுதியைச் சேர்ந்தவர் ராம ஜெயம். டிராவல்ஸ் நிறுவனம் நடத்தி வருகிறார். இவரது மனைவி ரத்னா. இவர்களது மகள்கள் ராஜலட்சுமி(5), தேஜாஸ்ரீ(2), மற்றும் 4 மாத ஆண் கைக்குழந்தை இருந்தது. ரத்னா தனது கடைசி மகன் பிரசவத்தையொட்டி 2 மகள்களுடன் சென்னையில் உள்ள பெற்றோர் வீட்டில் தங்கி இருந்தார்.

இந்நிலையில் சென்னையில் உள்ள மாமனார் வீட்டில் தங்கி இருந்த மனைவி மற்றும் மகள்கள், குழந்தையை அழைத்து வர ராமஜெயம் முடிவு செய்தார். இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை அவர் தனது சித்தப்பா மகன் ராஜேஷ் என்பவருடன் சென்னைக்கு காரில் சென்று பின்னர் அவர்கள் ரத்னா, மகள்கள் ராஜலட்சுமி, தேஜாஸ்ரீ, மற்றும் 6 மாத கைக்குழந்தை ஆகியோரை காரில் அழைத்துக் கொண்டு திரும்பி வந்து கொண்டு இருந்தார்.

காஞ்சிபுரம் அருகே சென்னை- பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் சித்தேரி மேடு பகுதியில் நள்ளிரவு 12 மணியளவில் கார் சென்று கொண்டு இருந்தபோது சாலையோரத்தில் சரக்கு லாரி ஒன்று நிறுத்தப்பட்டு இருந்தது. அப்போது வேகமாக வந்த கார் கட்டுப்பாட்டை இழந்து சாலை ஓரம் நின்றிருந்த லாரியின் மீது பயங்கரமாக மோதியது. இதில் காரின் முன்பகுதி முழுவதும் நொறுங்கியது.

இதில் இடிபாடுகளில் சிக்கிய ராமஜெயத்தின் மனைவி ரத்னா, அவரது மகள்கள் ராஜலட்சுமி, தேஜாஸ்ரீ, மற்றும் 4 மாத கைக்குழந்தை மற்றும் ராஜேஷ், ஆகிய 5 பேரும் படுகாயம் அடைந்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியானார்கள். காரை ஓட்டி வந்த ராம ஜெயம் படுகாயத்துடன் உயிருக்கு போராடினார். விபத்து குறித்து தகவல் அறிந்ததும் பாலு செட்டி சத்திரம் போலீசார் விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். படுகாயம் அடைந்த ராமஜெயத்தை மீட்பு சிகிச்சைக்காக காஞ்சிபுரம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பலியான ரத்னா உள்பட 5 பேரின் உடல்களும் பிரேத பரிசோதனைக்காக காஞ்சிபுரம் அரசு ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டு உள்ளது. பலியானவர்களின் உடல்களை பார்த்து அவர்களது உறவினர்கள் கதறி அழுதது பரிதாபமாக இருந்தது.

விபத்து நடந்ததும் லாரி டிரைவர் அங்கிருந்து தப்பி ஓடி விட்டார். அவரை போலீசார் தேடி வருகிறார்கள். மேலும் இந்த விபத்து குறித்து போலீசார் வழக்குபதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விபத்தால் அப்பகுதியில் சிறிதுநேரம் போக்குவரத்து பாதிக்கப் பட்டது. சரக்கு லாரி மீது கார் மோதிய கோர விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் பலியான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# டெல்லியில் ஜே.பி. நட்டாவுடன் சந்திரபாபு நாயுடு நேரில் சந்திப்பு



**புது டெல்லி, ஜூன். 05-**

டெல்லியில் பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி. நட்டா மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரை தெலுங்கு தேச கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு நேற்று நேரில் சந்தித்து பேசினார்.

நடப்பு ஆண்டின் இறுதியில் தெலுங்கானா சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. அடுத்த ஆண்டு பாராளுமன்ற தேர்தல் வரவுள்ளது. இதனை முன்னிட்டு கூட்டணி அமைப்பதற்கான பேச்சுவார்த்தையில் அவர் ஈடுபட்டு உள்ளார். இந்த சந்திப்பு அரை மணி நேரம் நடந்தது. இந்த ஆண்டு நடைபெறும் தெலுங்கானா சட்டசபை தேர்தலில், பா.ஜ.க. மற்றும் தெலுங்கு தேச கட்சி ஆகிய கட்சிகள் கூட்டணி அமைக்க கூடும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ரயில் சேவை சீராகும் வரை கட்டணமில்லா பேருந்துகள்

## ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் அறிவிப்பு

**புவனேஷ்வர், ஜூன். 05-**

ஒடிசாவில் பூரி, புவனேஸ்வர், கட்டாக் ஆகிய இடங்களிலிருந்து கட்டணமில்லா பேருந்துகள் இயக்கப்படும் என அம்மாநில முதல்வர் நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார்.

ஒடிசா மாநிலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 3 ரயில்களுக்கு இடையே ஏற்பட்ட விபத்தின் காரணமாக 275 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. காயமடைந்தவர்களுக்கு தொடர் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது. ரயில் விபத்து நடந்து 40 மணிநேரம் ஆனநிலையில் விபத்து நடந்த இடத்தில் உள்ள ரயில் பெட்டிகளை அகற்றும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

7 பொக்லைன் இயந்திரங்கள் மூலம் தண்டவாளத்தில் கிடந்த ரயில் பெட்டிகள் அகற்றப்பட்டன. தண்டவாளத்தில் கிடந்த எக்ஸ்பிரஸ் ரயில் பெட்டிகள், சரக்கு ரயில் பெட்டிகள் என அனைத்து ரயில் பெட்டிகளும் அகற்றப்பட்டது. தொடர்ந்து நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகளால் ஏராளமான ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஒடிசாவில் பூரி, புவனேஸ்வர், கட்டாக் ஆகிய இடங்களிலிருந்து கட்டணமில்லா பேருந்துகள் இயக்கப்படும் என முதல்வர் நவீன் பட்நாயக் அறிவித்துள்ளார். அதன்படி, பாலசோர் வழித்தடத்தில் ரயில் சேவை சீராகும் வரை கொல்கத்தாவுக்கு கட்டணமில்லா பேருந்துகள் இயக்கப்படும். பூரி, புவனேஸ்வர், கட்டாக்கிலிருந்து கொல்கத்தாவுக்கு தினந்தோறும் 50 பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. இதனிடையே ரயில் விபத்து ஏற்பட்ட இடத்தில் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகள் குறித்து ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக்கை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பிரதமர் மோடி கேட்டறிந்தார். முன்னதாக, ரயில் விபத்தில் உயிரிழந்த ஒடிசாவைச் சேர்ந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ. ஒரு லட்சமும் வழங்கப்படும் என்று முதல்வர் நவீன் பட்நாயக் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊட்டியில் துணை வேந்தர்கள் மாநாடு கவர்னர் ரவி இன்று துவக்கி வைக்கிறார்

**ஊட்டி, ஜூன்.05-**

உயர்கல்வி நிறுவனங்களின் பாடப் புத்தகங்களைத் தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பது என்ற தலைப்பில் ஊட்டி ராஜ்பவனில் தமிழ்நாடு மாநில மற்றும் தனியார் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் மாநாடு இன்று நடக்கிறது. இந்த மாநாட்டை, தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி இன்று காலை 9 மணிக்கு தொடங்கி வைக்கிறார்.

இந்த மாநாட்டில், தமிழ் மொழியில் கிடைக்காத பாடப் புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள், ஆய்வுப் பொருட்கள் பல்கலைக் கழகங்களால் கண்டறியப்பட்டு, தமிழ்நாட்டின் பல்கலைக் கழகங்களில் தமிழில் கற்பித்தல் - கற்றல் செயல்முறையை ஊக்குவிக்கும் வகையில் தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பது தொடர்பாக விவாதிக்கப்படுகிறது.

மாநாட்டில், பல்கலைக் கழக மானியக்குழு தலைவர் எம். ஜெகதேஷ்குமார் ஆன்லைன் மூலம் துணைவேந்தர்களிடம் உரையாற்றுகிறார். பாரதிய பாஷா சமிதி தலைவர் சாமு கிருஷ்ண சாஸ்திரி, லக்னோ பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் அலோக் குமார் ராய், இந்திராகாந்தி தேசிய திறந்த வெளி பல்கலைக் கழக துணை வேந்தர் மற்றும் தலைவர் பேராசிரியர் நாகேஸ்வர ராவ் மற்றும் அனுவாதினி மொழிபெயர்ப்புக் கருவி நிறுவனர் புத்தா சந்திரசேகர் ஆகியோர் உரையாற்றி, துணைவேந்தர்களுடன் கலந்துரையாடுகின்றனர்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

# உங்கள் நட்சத்திர பலன்கள்

( 05.06.2023 முதல் 10.06.2023 வரை )

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்—கார்த்திகை-1, பாதம்)

**அஸ்வினி**

இந்த வாரம் பணவரவு அதிகரிக்கும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். ஆடம்பரச் செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு. நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். பணியில் முழுக் கவனம் செலுத்துங்கள். ஏனெனில், நீங்கள் உயிரைக் கொடுத்து உழைத்தாலும், மேலதிகாரி அதில் ஏதாவது குற்றம் சொல்லிக் கொண்டே இருப்பார். ஆயினும் சகப் பணியாளர்கள் உதவியால் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்குச் சுறுசுறுப்பற்ற நிலையாலும், மந்த புத்தியாலும் காரியத் தடைகள் ஏற்படலாம்.

**பரணி**

இந்த வாரம் பெண்கள் வழி சந்தோஷம் இருக்கும். விருந்துகளிலும், கேளிக்கை நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும். நண்பர்கள், மற்றும் உறவுகளிடம் சுமூகமாக நடந்து கொண்டால் கருத்து பேதங்கள் தவிர்க்கப்படும். வாகனங்களில் செல்லும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் செல்லவும். நல்ல நண்பர்களுடன் பழகுவது நல்லது. தீய குணமுள்ள நண்பர்களைத் தவிர்த்தால், உங்கள் மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும். புதிய தொழில் தொடர்புகள், அரசு வகை ஆதாயங்களும் தொழில் மேன்மை அடைய உதவும். நீங்கள் விரும்பிய பொருட்கள் எல்லாம் கிடைத்துவிடும்.

**கார்த்திகை 1 ஆம் பாதம்**

இந்த வாரம் விருந்து, கேளிக்கைகளில் மன மகிழ்ச்சியின் உச்சிக்குச் செல்வீர்கள். நண்பர்களிடம் வேண்டாத விவாதங்களை தவிர்த்து எப்போதும் போல் ஜாலியாக பொழுது போக்குவது நல்லது.

பெரியவர்கள் நல்வார்த்தைகள் கேட்டு, அதன்படி நடந்தால் வாழ்க்கையில் முன்னேற்றங்கள் உண்டு. வாகனப் பயணங்களின் போது தேவையான ஆவணங்களை மறக்காமல் எடுத்துச் செல்லுங்கள். நிலையற்ற வியாபாரத்தில் வருமானம் குறையும் நிலை ஏற்படலாம்.

பெண்களின் ஆடம்பர த்தினால் ஏற்படும் கட்டுக்கடங்காத செலவுகள் காரணமாக கடன் வாங்க நேரலாம். அரசுப் பணியாளர்களின் அயராத உழைப்பை கண்டு உயர் அதிகாரிகளின் பாராட்டால் மனம் மகிழும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

**கார்த்திகை 2,3,4 பாதங்கள்**

இந்த வாரம் மகான்களின் சந்திப்பால் மனதில் அமைதி நிலவும். நேர்த்தியாக உடையணிந்து, விருந்தினர்களுடன் கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழ்வீர்கள். இன்பப் பயணங்களால் சந்தோஷம் பெருகும். முழு முயற்சியின் காரணமாக காரியங்கள் அனைத்திலும் வெற்றி அடைவீர்கள். சிலருக்குப் போதுமான வருமானம் இன்றி, பணத் தட்டுப்பாட்டால் பிரச்சனைகள் அதிகம் இருக்கும். குடும்ப உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகள் எழலாம். சமையல் செய்யும் போது பெண்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படுவது சிலருக்கு பணி காரணமாக தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படலாம். அரசு ஆதாயங்களால் தொழில் வழியில் முன்னேற்றம் ஏற்படும்.

**ரோகிணி**

இந்த வாரம் புதிய தொழில் தொடர்புகள் மூலம் அதிக இலாபங்களைப் பெறுவீர்கள். வியாபாரத்திலும் புதுப்புதுப் பொருட்களின் வருகை காரணமாக இலாபங்கள் எதிர்பார்ப்புக்கு மேல் இருக்கும். இல்லற வாழ்க்கையில் துணையின் உதவியோடும், அனுசரிப்போடும் முன்னேற்றங்களையும், சுகானுபவங்களையும் காண்பீர்கள்.

இளைஞர்களுக்குத் உங்கள் படிப்பு கேற்றபடி உயர்வான சம்பளத்துடன் நல்ல வேலை கிடைக்கும். சிலர் பழைய கடன்களை அடைக்க புதிய கடன்கள் வாங்க நேரும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு, அரசு ஆதாயங்கள் ஏற்படலாம். குழந்தைகளின் முன்னேற்றங்கண்டு பெற்றோர் மகிழ்வர். குடும்பத்தில் வீண்வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மிருகசீரிஷம் 1 , 2 பாதங்கள்**

இந்த வாரம் பெண்களின் மூலம் எதிர்பாராத தனவரவுகள் ஏற்படும். தெய்வீக ஈடுபாட்டால், காதுக்கு இனிய பக்திப் பிரசங்கங்கள் கேட்பதில் ஆர்வம் ஏற்படும். புண்ணிய ஸ்தல யாத்திரைகள் சென்று மகிழ்வீர்கள். புதிய வியாபார விரிவாக்கத் திட்டங்களுக்கான வங்கிக் கடன்கள் கூடிய விரைவில் கிடைக்கும்.

திறமைமிக்க ஊழியர்களின் ஒத்துழைப்பு மூலம் உற்பத்தி அதிகரித்து, இலாபமும் அதிகரிக்கும். அரசுப் பணியாளர்கள் தங்கள் உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு, பதவி உயர்வுக்கான பரிந்துரைகள், சிபாரிசுகளை பெற்று மகிழ்வர். சிலருக்குப் பாசம் மிக்க உறவுகளைப் பிரிந்து வாழ நேரிடலாம். ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள். தந்தை வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படலாம்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

**மிருகசீரிஷம் 3,4 பாதங்கள்**

இந்த வாரம் உங்கள் முழு முயற்சியின் காரணமாக வேலையில் ஏற்படும் சுணக்கம் மறையும். சிக்கல்களில் இருந்து முன்னேறுவீர்கள். வள்ளுவன் வாக்கை மறக்காமல் ஏறி வந்த ஏணியை மறந்து விடாமல் இருப்பது முன்னேற்றம் தரும். சிலருக்கு மேல் மட்டத்தில் உள்ள முக்கிய நபர்களின் உதவியால், எதிர்பார்த்த காரியங்கள் வெற்றிகரமாக முடியும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். புதிய வியாபார தொடர்புகள் மூலம் இலாபத்தின் சதவிகிதம் அதிகரித்து, வங்கி கையிருப்பு களும் கூடும். சிலருக்கு அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். பணிபுரிபவர்களுக்கு உயர் அதிகாரிகளின் கெடுபிடியால் மனக் குழப்பங்கள் ஏற்பட்டு மதிப்புக் குறையலாம்.

**திருவாதிரை**

இந்த வாரம் நீங்கள் திட்டமிட்டுச் செய்யும் செயல்கள் அனைத்திலும் வெற்றி பெறுவீர்கள். கணவன் மனைவி இடையேயான உறவு பலப்படும். குடும்பத்தார், நண்பர்களிடம் பிறரிடம் கோபத்தால், துர் வார்த்தைகள் பேசாதிருப்பது நல்லது, சகோதர்களிடம் விரோதம் ஏற்படாதிருக்க அனுசரித்துச் செல்லுங்கள். வேலை விஷயமாக அரசிடம் இருந்து எதிர்பார்த்த தகவல்கள் விரைவில் வந்து சேரும்.

வியாபாரத்தில் திட்டமிட்டபடி புதிய விரிவாக்கங்கள் செய்து முடிப்பீர்கள். அதன் காரணமாக வருவாய் ஓரளவு அதிகரிக்கும். மேடைப் பேச்சாளர்களுக்குத் உங்கள் வாக்கு வன்மையால் வருமானம் அதிகரிக்கும். பெண்களால் ஆதாயம் ஏற்படும் என்றாலும் அவர்களிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்**

இந்த வாரம் தம்பதிகளுக்கு இடையே கோபம் மறைந்து சமாதானமாகி, இணைந்து பேரின்பம் அடைவர். புதிதாக திட்டமிட்ட காரியங்களில் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து இறங்குவது நல்லது. விடுமுறைக் காலம் ஆதலால் குழந்தைகளின் சுட்டித்தனம் மற்றும் சேட்டைகளை கண்டு மனம் மகிழ்ச்சி அடைந்தாலும், அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுத்து சமாளிப்பது கஷ்டமாகும்.

மேடைப் பேச்சாளர்கள் உங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவது எளிது. உறவுகளுக்குள் ஒற்றுமை ஓங்கும். தொழிலில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் அடைய புதிய யுக்திகளை கடைப்பிடிப்பீர்கள். அரசு வகையில் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைப்பது வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படுத்தும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

**புனர்பூசம் 4 ஆம் பாதம்**

இந்த வாரம் பாசம் மிக்க பெண்கள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். பயணங்களால் சுகம் ஏற்படும். உறவுகளின் உல்லாசப் பொழுது போக்குகளும், விருந்தினர் வருகையால் செலவும் அதிகரிக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் வந்து சேரும்.

அரசுப் பணியாளர்களே உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பதவி உயர்வுக்கும் அனுகூலமாக இருக்கும். தொழிலில் ஏற்படும் முழுமையான ஈடுபாடு காரணமாக தாராளமான பணவரவு இருக்கும். சிலருக்கு வெயில் காரணமாக அசதி, தலைவலி, காய்ச்சல், உஷ்ண சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்படலாம். அதன் காரணமாக மருத்துவச் செலவுகள் கூடும்.

**பூசம்**

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களிலிருந்து போதுமான அளவு பணவரவு ஏற்படும். வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். நண்பர்கள், உறவுகள் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும். புதிதாக தொடங்கப்படும் தொழிலில் எச்சரிக்கையுடன் இருந்தால் வருமான வாய்ப்புகள் பெருகும்.

தேவையற்ற கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தாய்வழி உறவுகளால் வீண் தொல்லைகள் ஏற்படலாம். நல்லவர்கள் தொடர்பால் நன்மைகள் பல ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, அவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது வாழ்க்கையில் முன்னேற்றத்தை அளிக்கும்.

**ஆயில்யம்**

இந்த வாரம் நல்லோர் சேர்க்கையால், பந்துக்கள் வருகையாலும் உற்சாகம் பொங்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். உயர் வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். தாயின் சொல் கேட்டு, வீட்டில் மனைவியிடம் தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும்.

புதிய தொழிலாளர் சேர்க்கை காரணமாக தொழிலில் எதிர்பார்ப்புக்கு மேல் உற்பத்தி பெருகும். சிலருக்குக் கூட்டு வியாபாரத்தில் இலாபம் ஏற்படும். திடீரெனக் காணாமல் போன பொருட்கள் சேதாரமின்றி கைக்கு வந்து சேரும். சிலருக்குக் காரியத் தடைகள் ஏற்படலாம். அரசுப் பணியாளர்களுக்கு நீண்ட நாளாக எதிர்பார்த்த புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

**மகம்**

இந்த வாரம் வீடு, மனை ஆகியவை வாங்கும் யோகம் ஏற்படும். . பூரண சயன சுகம் ஏற்படும். மனதிற்கினிய பெண்கள் சல்லாபம், முயற்சிகளில் வெற்றி போன்றவற்றால் மனம் மகிழும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேறும். முழு மூச்சுடன் ஈடுபடும் வேலைகளில் புதிய சாதனைகள் படைப்பீர்கள். பெரியவர்கள் ஆசியும், மேலதிகாரிகளின் ஆதரவு, மற்றும் புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். தங்கம், வெள்ளி, துணி, ஆயத்த ஆடைகள், புத்தகங்கள், ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் ஆகிய வியாபாரத்தில் நல்ல ஆதாயத்தை எதிர்பார்க்கலாம். அரசுப் பணியில் எதிர்பார்த்தபடி நல்ல இடமாற்றங்கள் ஏற்படலாம்.

**பூரம்**

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நிறைவேறி மகிழ்வு தரும். வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். சிலருக்கு நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும். வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். வியாபாரத்தில் சோம்பல் காரணமாகச் சுறுசுறுப்பற்ற நிலை ஏற்பட்டு ஆதாயம் குறையும். அதன் காரணமாக முக்கிய செலவுகளுக்கு கூட பிறரின் உதவியை நாட வேண்டிய நிலை ஏற்படும்.

**உத்திரம் 1 பாதம்**

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை ஆன்மிக காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வீர்கள். இல்லத்தில் கேளிக்கை, பிறந்த நாள் விருந்துகள் என மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தில் அமைதியை நிலை நாட்ட வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. தேவையற்ற செலவுகளை குறைத்து சிக்கனமாக இருந்தால், பணமுடைகளை தவிர்க்கலாம்.

வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் பெறுவதில் எவ்விதச் சிக்கல்களும் ஏற்படாது. வியாபாரம் மற்றும் தொழிலில் புதுப் புது மாற்றங்களால் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நெளிவு சுளிவாக நடக்கும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

**உத்திரம் 2, 3, 4 பாதங்கள்**

இந்த வாரம் சுபகாரியங்களுக்கான ஏற்பாட்டால் வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். மனதுக்குப் பிடித்த படி அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். கேளிக்கை ஈடுபாட்டால் மகிழ்ச்சி ஏற்படும். பந்து ஜன வரவால் உற்சாகம் பொங்கும். உயர் அதிகாரிகளின் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும், எவ்விதத் தடையின்றி வெற்றி பெறும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். உங்கள் சேவைகள் மேலதிகாரிகளால் அங்கீகரிக்கப்படும். அத்துடன் நல்ல பாராட்டு பெறுவீர்கள். புதிய வியாபார முயற்சிகளால் வாழ்க்கையில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் இருக்கும்.

**அஸ்தம்**

இந்த வாரம் பெரிய மகான்களின் தரிசனம் ஏற்பட்டு மனதில் அமைதி நிலவும். பெரியவர்கள் நல்வார்த்தைகள் கேட்டு, ஞானம் பெறுவீர்கள். அரசுப் பணியில் இருப்பவர்கள் எதிர்பார்த்த அல்லது விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் ஏற்படலாம். நண்பர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. பயணங்களில் வணிகர்களுக்கு பல பிரச்சனைகளால் தொழிலில் தடைகள் ஏற்படலாம். அதன் காரணமாக வருமானம் குறையும் நிலை ஏற்படலாம். குழந்தைகள் தரும் தொல்லைகளால் மனவருத்தம் ஏற்படும். அவர்கள் வழியே சென்று அவர்களை திருத்துவது நல்லது. புதிய வியாபார முயற்சிகளால் வாழ்க்கையில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் இருக்கும்.

**சித்திரை 1,2 பாதங்கள்**

இந்த வாரம் ஸ்த்ரீ சுகம் கூடும். கேளிக்கை ஈடுபாட்டால் மகிழ்ச்சியும், நெருங்கிய உறவுகள் வருகையால் உற்சாகம் பிறக்கும். அரசாங்கப் பணியில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த அல்லது விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் கிடைப்பது தள்ளிப் போகலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும்.

உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். கூட்டாளிகளால் பண விஷயமான பிரச்சனைகள் தலைதூக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு, காவல்துறையினர் மூலம் அச்சம் ஆகியவை ஏற்படலாம். திட்டமிடப்பட்ட பயணங்களில் முன்பதிவு கிடைக்காமல் தடைகள் ஏற்படலாம்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும்விசாகம்-1,2,3 பாதங்கள்)

**சித்திரை 3,4 பாதங்கள்**

இந்த வாரம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். தனவரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும். பிறரின் உயர்வு கண்டு ஏற்படும் பொறாமை மற்றும் கோபங்களை தவிர்ப்பது நல்லது.

கோபம் வரும் போது மனதில் தெய்வ சிந்தனை ஏற்பட்டால் அமைதி கிடைக்கும். சிலருக்கு உயர் ரக வாகனங்கள் வாங்கும் யோகம் ஏற்படும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். திடீரப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். அரசு சம்பந்தமான வேலைகள் தாமதப்படலாம்.

**சுவாதி**

இந்த வாரம் விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்குவீர்கள். சுகமும், ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். குடும்பத்தினரிடையே ஓரளவே ஒற்றுமை நிலவும். அவர்களை அனுசரித்து செல்வது நல்லது.

பயணங்களில் இடையூறுகள் ஏற்படலாம். புதிய தொழில் முயற்சிகளுக்காக எதிர்பார்க்கப்படும் வங்கிக் கடன் உதவிகள் தாமதத்திற்கு பின்னர் கிடைக்கும். அரசுப் பணியாளர்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். அக்னி பயம், திடீர் விபத்து ஏற்பட வாய்ப்பு இருப்பதால் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. எந்தக் காரியத்தையும் முழுத் திறமையையும் காட்டித் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும்.

**விசாகம் 1,2,3 பாதங்கள்**

இந்த வாரம் உங்கள் திறமை, முழு முயற்சி ஆகியவற்றின் காரணமாக உங்கள் பணி இலக்கை எளிதாக அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களை ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும்.

பொருளாதார நிலை உயர்வால் பணவரவுகள் திருப்திகரமாக இருக்கும். ஆடை, ஆபரண இலாபங்கள் பெற்று உற்சாகமாகத் திகழ்வீர்கள். சிலருக்குப் பிள்ளைப் பேறு ஏற்படலாம். தொழிலில் புதிய வாய்ப்புகள் மற்றும் லாட்டரி யோகம் ஆகியவை ஏற்படலாம். குடும்பத்தில் உறவுகளிடையே பாசம் அதிகரிக்கும். அரசு அதிகாரிகளை அனுசரித்து சென்றால் தொழில் அல்லது வியாபாரத்தில் ஏற்படும் சிக்கல்களை சமாளிக்கலாம்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

**விசாகம் 4 ஆம் பாதம்**

இந்த வாரம் தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவமும் உண்டாகும். உங்கள் அபரிமிதமான அறிவுத் திறனால் கௌரவப் பட்டங்கள், புதிய பதவிகள் ஆகியவை கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும். பழைய கடன்களை அடைக்க தக்க சமயத்தில் பணவரவு ஏற்படும். சிலருக்குப் புதிய தொழில் தொடங்க வங்கிக் கடன்களுக்கான முயற்சிகள் வெற்றி பெறும். அரசு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். அதைத் தக்க வைத்துக் கொள்ள கடின உழைப்பு தேவை. சிலருக்குச் சில நேரங்களில் சுறுசுறுப்பற்ற நிலையும், மனோபயமும் நிலவும்.

**அனுஷம்**

இந்த வாரம் சிலர் வேலை பார்க்கும் இடத்தில் காதல் வயப்பட்டு, எதிர்ப்புகளுக்கு இடையே, கல்யாணத்தில் முடியும். நெருங்கிய கூட்டாளிகளால் ஏமாற்றப்படுவதை தவிர்க்க மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். மனைவியின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் இல்லத்தில் இன்பம் பொங்கும். முன்னேற்றங்களும் தேடிவரும்.

உத்தியோக முயற்சியில் இருப்பவர்களுக்குப் போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். பெண்களால் இலாபம் ஏற்படும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெறும். வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர்.

**கேட்டை**

இந்த வாரம் சிலருக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும். வீடு வாங்கும் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பலவழிகளிலும் பணவரவுகள் அதிகம் கிடைக்கும். தொழிலில் புதிய விரிவாக்க நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். விற்பனைப் பிரதிநிதிகளின் வருமானம் அவர்களின் பேச்சுத் திறன் மூலம் அதிகரிக்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம்.

இரவு நேரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. கூட்டாகத் தொழில் புரியும் வாய்ப்புகள் ஏற்படும். திரைத்துறையில் இருப்பவர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். இதுநாள் வரையில் இழுபறியாக இருந்த வழக்குகள் பைசலாகும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றங்களை எதிர் பார்க்கலாம்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

**மூலம்**

இந்த வாரம் பெரியவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்ல முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். தாயார் கூறும் அனுகூலமான வார்த்தைகள் உற்சாகம் அளிக்கும். அனைத்துப் பணிகளிலும் மனைவியின் முழு ஒத்துழைப்பு கிடைக்கும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். அரசுப் பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் அனுகூலமான பலன்கள் அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். மேல்மட்ட அதிகாரிகளை அனுசரித்துச் செல்வதால் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் பிரகாசமாக அமையும். தந்தைவழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம்.

**பூராடம்**

இந்த வாரம் நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்கும். கணவன், மனைவி இருவரும் ஒருவர் மீது ஒருவர் பாசமழை பொழிவர். பிள்ளைகளின் முன்னேற்றங்கண்டு பெருமை கொள்வீர்கள். இல்லத்துக்கு தேவையான நவீன வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி அனுபவிப்பீர்கள். பணிபுரியும் இடத்தில் உங்கள் உழைப்பின் சிறப்பு பாராட்டுப் பெறுவதோடு, பதவி உயர்வுக்கு கை கொடுக்கும். வண்டி, வாகனங்களில் அபராதம் கட்டாதிருக்க அனைத்து ஆவணங்களையும் மறவாமல் கையோடு எடுத்துச் செல்லுங்கள். பொருளாதார நிலையை பொறுத்தவரை சீராக இருக்கும். தெய்வீக கைங்கர்யங்களில் ஆர்வம் ஏற்பட்டு தான தர்மங்கள் செய்ய முற்படுவார்கள்.

**உத்திராடம் 1 ஆம் பாதம்**

இந்த வாரம் அனைத்து வசதிகளும் இன்பமும் ஏற்படும். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பால் உயர்வு ஏற்படும். அனைவரையும் கவரும் வண்ணம் சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். நீண்ட நாட்களாக தீட்டிய திட்டங்களின்படி வட இந்திய யாத்திரை செல்லும் நிலை ஏற்படலாம். செய்தொழில், வியாபாரம் எதுவானாலும் புதிய திட்டங்கள் தீட்டுவதின் மூலம் அதிக இலாபங்களை அடைவீர்கள். அரசுப் பணியாளர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். அதிகாரிகள் கெடுபிடிகளும் அதிகமாகும். தன வருமானம் அதிகரிப்பதால் அனைத்துக் காரியங்களும் அனுகூலமாக இருக்கும். அதற்கேற்ப செலவினங்களும் கூடும். தொழிலில் மிகப் பெரிய சாதனைகள் புரிவார்கள்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

**உத்திராடம் 2,3,4 பாதங்கள்**

இந்த வாரம் குடும்பத்தில் சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். உங்கள் தனித் திறமைக்கு ஏற்ப பெயரும் புகழும் கிடைக்கும். புதிய கடன்களை அடைக்க, சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். பங்குச் சந்தையில் ஆலோசித்து இறங்குவது நல்லது. பதறாத காரியம் சிதறாது முடியும் என்பதால், எந்த ஒரு காரியத்தையும் பதட்டமின்றி பொறுமையாக செய்தால் வெற்றி நிச்சயம். பணிபுரியும் பெண்களுக்கு விரும்பிய இடத்திற்கு இடமாற்றங்கள் கிடைக்கும் வரவுக்கு மீறிய செலவுகளை கட்டுப்படுத்தி சேமிப்பை உயர்த்துவது நல்லது. சிலருக்குப் பணி அல்லது வீடு ஆகிய இடமாற்றங்கள் ஏற்படலாம்.

**திருவோணம்**

இந்த வாரம் பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். புதிய விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். பணிவுடன் நடக்கும் பணியாளர்கள், அதிகாரிகள் உதவியால் உயர் பதவிகள் அடைவர். சுபச் செய்திகள் வந்து காதுகளில் தேனைப் பாய்ச்சும். புதிய கொள்முதல் களால் வியாபாரம் பெருகி இலாபம் அதிகரிக்கும். தொட்டது துலங்கும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடைய கடின உழைப்பு தேவைப்படும்.

**அவிட்டம் 1,2 பாதங்கள்**

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். பல வகையான உயரக வாகன வசதி அமையும். கணவன், மனைவி இடையே மிகுந்த ஒற்றுமை ஏற்பட்டு சந்தோஷம் நிலவும். அலங்காரப் பொருட்கள் மற்றும் வாசனை திரவிய வியாபாரங்களில் அதிக இலாபம் காணலாம். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் அதிக இழப்பைத் தவிர்க்கலாம். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் இந்த வாரம் மேற்கொள்ளப்படும். தேவையற்ற அலைச்சல் தரும் பயணங்களால் தேகசுகம் குறையும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

**அவிட்டம் 3,4 பாதங்கள்**

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம்.

மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். கடமை உணர்வு மிக்க அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பொழுது போக்குச் செலவுகள் அதிகமாகும்.

பணியாளர்கள் கடினமாக உழைத்தாலும், உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காது. பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். மொத்தத்தில் வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**சதயம்**

இந்த வாரம் உயர் வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். உதவிகரமான புதிய, நல்ல நண்பர்கள் கிடைப்பது உறுதி. இனிய பயணங்கள் மற்றும் புண்ணியத் தல யாத்திரைகள் பலன் அளிக்கும். எழுத்துத் தொழிலில் வேலையில் காட்டப்படும் சிரத்தை மற்றும் கடின உழைப்பால் கல்லாக் கட்டுவீர்கள்.

உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும். உறவுகளிடையே ஏற்படும் ஒற்றுமைக் குறைவு உறவில் விரிசல்களை ஏற்படுத்தும். பதட்டப்படாமல் சம்பந்தப்பட்டவர்களிடம் சமாதானமாகப் போவது நல்லது. விற்பனைப் பிரதிநிதிகளுக்கு அலைச்சலுக்கு தக்க ஆதாயம் ஏற்படும்.

**பூரட்டாதி 1,2,3 பாதங்கள்**

இந்த வாரம் பல திசைகளில் இருந்தும் பணம் கூடுதலாக வரும். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். ஆக்கமும், ஊக்கமும் பெருக சுயமாக சம்பாதிக்கும் வழிமுறைகளைக் கண்டறிவீர்கள். இக்கட்டான சூழ்நிலைகளில் இல்லத்தரசியின் உதவிகள் கை கொடுக்கும்.

பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகளின் சொல் கேட்டு நடந்தால் உன்னத நிலை அடைவர். சிலருக்கு அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

**பூரட்டாதி 4 ஆம் பாதம்**

இந்த வாரம் மதிப்பு, கௌரவம் உயரும். பருவநிலை காரணமாக சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஆகியவை ஏற்படும். குழந்தைகளின் நடவடிக்கைகள் சந்தோஷத்தைத் தரும். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். குடும்பத்தாரின் ஆசைகள் அனைத்தையும் நிறைவேற்றி அவர்களை மகிழ வைப்பீர்கள். நல்லதொரு வாகனம் வாங்க முயற்சிப்பீர்கள். மிகக் கடினமான நண்பர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது.

**உத்திரட்டாதி**

இந்த வாரம் பலவழிகளிலும் பணவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும் எதையும் சாதிக்கும் திறன் அதிகரிக்கும். பிராயணத்தின் போது எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். அரசுப் பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். ஆரோக்கியமான சூழ்நிலை உருவாகும். அரசு உதவிகள் மூலம் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம் பணிபுரியும் இடங்களில் உங்கள் மதிப்பு உயரும். அதிகாரம் மிக்க பதவிகளை அலங்கரிக்கும் நிலைக்கு நீங்கள் உயர்வீர்கள். தொழில் புரிபவர்கள் புதிய எந்திரங்களை வரவழைத்து உற்பத்தியை பெருக்கி ஆதாயம் காண்பர்.

**ரேவதி**

இந்த வாரம் உங்கள் அசாத்தியத் திறமையால் சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். மதிப்பு மிக்க பெரியவர்கள் சந்திப்பு மகிழ்ச்சி தரும். உங்கள் திறமைக்கு ஏற்றபடி புகழ், கௌரவமும் கூடும். தேவையான நேரத்தில் நண்பர்களின் உதவி கண்டிப்பாகக் கிடைக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றி கிடைக்கும். தொழிலில் முழு வெற்றி அடைய அதிக முயற்சிகள் தேவைப்படும். அனைத்து வேலைகளையும் நம்பிக்கையுடன் செய்து முடிப்பீர்கள். அரசு வேலைகளுக்கு மனு செய்தவர்கள் சாதகமான பதில்களை எதிர்பார்க்கலாம். நண்பர்கள் மற்றும் உறவுகளிடம் தர்க்கம் செய்யாதிருப்பது நல்லது. அடிக்கடி தேவையற்ற பயணங்களை மேற்கொள்ள நேரும்.

# ஈராண்டு ஆட்சியில் அரசு திட்டங்களால் பயன்பெற்றோர் தமிழக முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றி

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு 07.05.2021 அன்று பதவியேற்று 06.05.2023 அன்றுடன், ஈராண்டு நிறைவடைந்து உள்ளது. முதல்வரின் வழிகாட்டுதலின்படி, மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் கடந்த ஈராண்டில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஈராண்டில் மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம், இல்லம் தேடி கல்வி, மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், கூட்டுறவு வங்கிகளில் 5 பவுன் நகைக்கடன் தள்ளுபடித் திட்டம், மக்களைத்தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டம், ஆவின் பால் விலை குறைப்புத் திட்டம், விவசாயிகளுக்கு புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம், கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம், கொரோனா சிறப்பு நிவாரண உதவிகள், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4 ஆயிரம் நிவாரணம், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு, முன்களப் பணியாளர்களுக்கு நிவாரண நிதியுதவிகள், கொரோனா நோய்த் தொற்று விழிப்புணர்வு மற்றும் தடுப்புப் பணிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான தடுப்பூசி, முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசித் திட்டம், கொரோனா






நிவாரண நிதியுதவிகள், நடமாடும் காய்கறி விற்பனை நிலையம், வலிமை சிமெண்ட் திட்டம், மகளிர் சுயஉதவிக் குழு, பனை மேம்பாட்டுத்திட்டம், பொங்கல் சிறப்பு பரிசு தொகுப்புத் திட்டம், சமூகப் பாதுகாப்புத் திட்டம், புதிய வேளாண் காடு வளர்ப்புத் திட்டம், முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டம் திட்டம், நெல் தரிசில் பயறு சாகுபடித் திட்டம், வேளாண் உபகரணத் தொகுப்புகள் வழங்கும் திட்டம், திருக்கோயில் பணியாளர்களுக்கு மாத ஊக்கத்தொகை வழங்கும் திட்டம், திருக்கோயில் பணியாளர்களின் ஓய்வூதியம் உயர்த்தி வழங்கும் திட்டம், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் திட்டம், திருக்கோயில் புனரமைப்புத் திட்டம், திருக்கோயில்களில் தலை முடி மழிக்கும் பணியாளர்களுக்கு மாத ஊக்கத் தொகை வழங்கும் திட்டம், திருக்கோயில் பணியாளர்களுக்கு இரண்டு சீருடை வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்பட்ட பணிகள் மற்றும் திட்டங்கள் மூலம் எண்ணற்றோர் பயனடைந்துள்ளனர். தொழில் துறையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சியை தமிழ்நாடு எட்டியுள்ளது.

மேலும், முதல்வர் தலைமையிலான அரசின் இரண்டு ஆண்டு நிறைவையொட்டி, நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மூலம் 607 பயனாளிகளுக்கு ரூ. 6,27,500 மதிப்பிலான முதியோர், விதவை, ஆதரவற்றோர் உள்ளிட்ட உதவித் தொகைகளும், 239 பயனாளிகளுக்கு ரூ. 35.51 லட்சம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப்பட்டாக்களும், 150 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மூலம், 47 பயனாளிகளுக்கு பண்ணைக் கருவிகள், தார்பாலின், விசைத்தெளிப்பான், பவர் டில்லர், பண்ணைக்குட்டை அமைத்தல், மரக்கன்றுகள், விதைகள் உள்ளிட்ட ரூ. 24.07 லட்சம் மதிப்பிலான உதவிகளும், தொழிலாளர் நலத்துறை மூலம் 5 பயனாளிகளுக்கு ரூ. 25 லட்சம் மதிப்பிலான விபத்து நிவாரணத்தொகைகளும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் 5 பயனாளிகளுக்கு ரூ. 33,450- மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்களும் என 1053 பயனாளிகளுக்கு ரூ.91.19 லட்சம் மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் வழங்கினார்கள்.

இந்த ஈராண்டில் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற்றவர்களில் விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், அயன்ரெட்டியாபட்டியை சேர்ந்த ராஜேஸ்வரி கூறுகையில்,

எனக்கு 66 வயது ஆகிறது. கடந்த 10 ஆண்டுகளாக எனக்கு சர்க்கரை மற்றும் இரத்த கொதிப்பு நோய் உள்ளது. இதற்காக மல்லாங்கிணறு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று வரிசையில் காத்திருந்து, சிகிச்சைக்கான மாத மாத்திரைகள் வாங்கி வந்தேன். வயதான நிலையில் எனக்கு அது மிகவும் சிரமமாக இருந்து வந்தது. தற்போது, எனக்கு வீடு தேடி, மேற்கண்ட நோய்க்கான பரிசோதனையும் செய்து, மாதத்திற்கான மாத்திரைகளும் வழங்குவதால், வயதான எனக்கு இந்த திட்டம் ஒரு பெரிய பெரிய வரபிரசாதமாக அமைந்துள்ளது. எனவே இந்த மகத்தான திட்டத்தை வழங்கி, எனது அலைச்சலையும், மன உலைச்சலையும் போக்கி, எனது வாழ்வில் தன்னம்பிக்னை ஊட்டிய முதல்வருக்கு கோடான கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார். இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், சோழபுரம் ஊராட்சி, தேசிகாபுரத்தை சேர்ந்த ஜெயபால் கூறுகையில்,

எங்க ஊரில் தண்ணீர் பிரச்சனை ஏற்பட்டு தண்ணீர் வசதி இல்லாமல் கஷ்;டப்பட்டோம். குடிநீருக்காக வெகு தூரம் செல்ல வேண்டியிருந்தது. அதனால் புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டித் தரக் கேட்கப்பட்டிருந்தது. அந்த மனுவின் மீது நேரடி ஆய்வு செய்யப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பணிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது பொதுமக்களுக்கு குடிநீர் போதிய அளவு கிடைக்கிறது. வெகுதூரம் செல்லாமல் அருகிலேயே குடிநீர் கிடைப்பதற்கு வழிவகை செய்து தந்த முதல்வருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

அரசு பள்ளியில் பயின்று 7.5 சதவீத இட ஒதுக்கீட்டில் விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரியில் சேர்க்கை பெற்ற மாணவி சங்கீதா கூறுகையில்,

நான் தென்காசி மாவட்டம், புல்லுகாட்டுவலசை கிராமத்தில் அரசுப்பள்ளியில் பயின்றேன். எனது தந்தை ஒரு வாகன ஓட்டுனர். எனது தாய் பீடித்தொழில் செய்து வருகிறார். அரசுப்பள்ளியில் பயின்ற, எனக்கு தமிழக அரசின் இட ஒதுக்கீட்டின் மூலம் மருத்துவம் பயில்வதற்காக இடம் கிடைத்து, விருதுநகர் மருத்துவக் கல்லூரில் முதலாமாண்டு சேர்ந்துள்ளேன். இங்கு எனக்கு தங்குமிடம், உணவு, பாடப்புத்தகங்கள், மருத்துவ உடைகள், மருத்துவ உபகரணங்கள் இலவசமாக கிடைத்துள்ளது. புதிதாக கட்டப்பட்டுள்ள இந்த விருதுநகர் மருத்துவக் கல்லூரியில் முதல் ஆண்டில் படிப்பது பெருமையாக உள்ளது. இங்கு வகுப்பறைகள், விடுதி கட்டிடங்கள், கலை அரங்கம், உடற்பயிற்சி கூடம் உள்ளிட்ட கட்டமைப்புகள் மற்றும் சூழ்நிலைகள் மிகவும் அருமையாக உள்ளது. என்னை போன்ற சாதாரண குடும்ப பின்புலத்தில் இருந்து அரசுப்பள்ளியில் பயின்று வரும் மாணவர்களும் இந்த இட ஒதுக்கீட்டின் மூலம் மருத்துவராக முடியும் என்ற நம்பிக்கை அளித்த முதல்வருக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற மாணவி சௌமியா கூறுகையில்,

நான் 3-ம் வருடம் பி.ஏ படித்துக் கொண்டிருக்கிறேன். எனது தாய் தந்தையை தினக்கூலி வேலை செய்து வருகின்றனர். முதல்வர் அறிமுகப்படுத்திய இந்த புதுமை பெண் திட்டம், எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. என்னை போன்ற வசதி இல்லாத குடும்ப பின்னணியில் இருந்து படித்துக் கொண்டிருக்கும் மாணவிகளுக்கு, இந்த திட்டம் மூலம் மாதந்தோறும் கிடைக்கும் ரூ.1000- ஊக்கத் தொகையை கொண்டு, படிப்பிற்கு தேவையான செலவுகளை செய்ய முடியும். எனது பெற்றோர்கள் சம்பாதிக்கும் தொகை, குடும்ப செலவிற்கே போதாத நிலையில், சின்ன சின்ன படிப்பு செலவிற்காக பெற்றோர்களை கஷ்டப்பட வைக்காமல், இந்த தொகை மூலம் பூர்த்தி செய்ய முடியும். இந்த ஊக்கத்தொகையினை அளித்த முதல்வருக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என கூறினார்.

**தொகுப்பு:-**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**விருதுநகர் மாவட்டம்**

# கள்ளழகர் தோற்றத்தில் வைகை ஆற்றில் இறங்கிய தேனூர் சுந்தரராஜ பெருமாள்



**மதுரை, ஜூன். 05-**

சோழவந்தான் அருகே தேனூர் கிராமத்தில் உள்ள சுந்தரராஜபெருமாள் (கள்ளழகர்) கோவிலில் வைகாசி பெருந் திருவிழா நடந்தது. இதை யொட்டி நேற்று காலை சுந்தரராஜ பெருமாள் குதிரை வாகனத்தில் கள்ளழகர் தோற்றத்தில் கோவிலில் இருந்து புறப்பட்டு வீதிஉலா வந்தார்.

அப்போது வழி நெடுக கள்ளழகரை பக்தர்கள் வரவேற்று பூஜை செய்து செம்பில் சக்கரை தீபம் ஏற்றி வணங்கினார்கள். இதைத்தொடர்ந்து கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கினார். பூஜைகள் நடந்து வைகை ஆற்றில் உள்ள மண்டகப்படியில் கள்ளழகர் தங்கினார். நேற்று மாலை ஸ்ரீதேவி பூதேவியுடன் சுந்தரராஜ பெருமாள் பக்தர்களுக்கு காட்சியளித்தார். இதைத் தொடர்ந்து வெளியூர் கிராமப்பெண்களின் திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இரவு பரதநாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இன்று மாலை திருமஞ்சனமாகி, தேனூர் வைகை ஆற்றில் பெருமாள் கருட வாகனத்தில் எழுந்தருளி மண்டூக மகரிஷிக்கு மோட்சம் அளித்தல் நடைபெற உள்ளது. இதைத்தொடர்ந்து உள்ளூர் பெண்கள் திருவிளக்கு பூஜை நடை பெறுகிறது. 2 நாள் திருவிளக்கு பூஜையில் கலந்து கொள்ளும் பெண்க ளுக்கு புத்தாடை வழங்கப்படுகிறது. இரவு ராஜாங்க அலங்காரத்தில் பெருமாள் அருள்பாலிக்க உள்ளார். இதை யொட்டி பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெறும். நாளை அதிகாலை வைகை ஆற்றில் இருந்து ஸ்ரீதேவி பூதேவி சமேத சுந்தரராஜ பெருமாள் பல்லக்கில் அலங்காரமாகி வீதி உலா நடக்கிறது. சுவாமி கோவில் வந்து சேருவார். பரம்பரை தர்மகர்த்தா நெடுஞ்செழிய பாண்டியன் பொருளாளர் கவுதமன் உள்பட நிர்வாகிகள் விழா ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# திருமங்கலத்தில் ஆசிரியர்களுக்கு எண்ணும் எழுத்தும் பயிற்சி

**திருமங்கலம்,ஜூன்.05**

மதுரை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கார்த்திகா ஆலோசனையின் படி திருமங்கலம் டெடி பள்ளியில், நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு எண்ணும் எழுத்து பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் செல்வி தொடங்கி வைத்தார். வட்டார கல்வி அலுவலர்கள் சின்ன வெள்ளைச்சாமி, மற்றும் விஜயராஜ் ஆகியோர் பயிற்சியின் அவசியம் குறித்து பேசினார்கள். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொ)சரவணன் ஏற்பாடு செய்திருந்தார். இப்பயிற்சியில் நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு கற்பிக்கும் ஆசிரியர்கள் 130 பேர் கலந்து கொண்டனர். மேலும் பார்வையாளர்கள் தாமரைச்செல்வி, ஜெயந்தி, ரேவதி, கலைப்பிரியா மற்றும் கருத்தாளர்கள் 12 பேரும் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஒருங்கிணைப்பாளராக மாவட்ட ஆசிரியர் பயிற்சி விரிவுரையாளர் கருப்புசாமி அவர்களும் ஆசிரியர் பயிற்றுனர் நாகேஸ்வரன் மற்றும் சிவராமன் ஒருங்கிணைத்தனர். இத்திட்டம் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பிற்கு சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு மாவட்ட நீதிமன்றம்
இராமநாதபுரம்
I.A.No.2/2022
A.S.No. /2022
1.பப்பரத்தி அம்மாள்.
2.குல்சம்பீவி,
3.சீனி மைதீன்,
....மனுதார்கள்/மேல்முறையீட்டாளர்
எதிர்
1.நூர் முகம்மது,
த/பெ.லேட்.சீனி மதார்,
9/211, மரைக்காயர் தெரு,
மண்டபம்,
இராமநாதபுரம் வட்டம் - மாவட்டம்.
2.மும்தாஜ் பேகம்,
த/பெ.லேட்.சீனி மதார்,
3.பல்லாக்கு,
த/பெ.முத்து தாஹிர்,
4.ரூபியா பானு,
க/பெ.நிஜாம்,
--ஷை-- முகவரி,
..எதிர்மனுதார்கள்/எதிர் மேல்முறையீட்டாளர்கள்
அறிவிப்பு
மேற்படி வழக்கில் கண்ட மேல்முறையீட்டாளர் எதிர்மேல்முறையீட்டாளர்கள் மீது விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதில் மேற்படி வழக்கில் கண்ட மேற்சொன்ன 2,5,9,10-ம் எதிர் மேல்முறையீட்டாளர்கள் சமூகம் நீதிமன்றத்தில் 27.06.2023 அன்று காலை 10.30 மணிக்கு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது என்றும், தவறும் பட்சத்தில் ஆட்சேபனை ஏதும் இல்லை எனக்கருதி ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.
J.முஹம்மது சுல்த்தான், B.A.B.L.,
J.M.ஹஸனுல் பஸரி, B.A.B.L.,
M.முகைதீன் இபுராம்சா, B.A.B.L.,
அட்வகேட்ஸ். இராமநாதபுரம்.

# பள்ளி, கல்லூரி அரசு விடுதிகளில் சேர மாணவ, மாணவிகள் விண்ணப்பிக்கலாம்

## மதுரை கலெக்டர் சங்கீதா தகவல்

**மதுரை, ஜூன். 05-**

மதுரை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறு பான்மையினர் மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கென பள்ளி மற்றும் கல்லூரி என 2 நிலைகளில் தனித்தனியே விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக பள்ளி விடுதிகளில் 20 மாணவர் விடுதி, 8 மாணவிகள் விடுதிகளும், கல்லூரி விடுதிகளில் 4 மாணவர் விடுதி, 3 மாணவிகள் விடுதிகளும் உள்ளன.

பள்ளி விடுதிகளில் 4 முதல் 12-ம் வகுப்பு வரை பயில்கின்ற மாணவ, மாணவிகளும் கல்லூரி விடுதிகளில் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு படிப்புகளில் பயிலும் மாணவ, மாணவிகளும் சேர தகுதியுடையவர்கள். விடுதிகளில் அனைத்து வகுப்பை சார்ந்த மாணவ, மாணவிகளும் குறிப்பிட்ட விகிதாச்சார அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். விடுதிகளில் எவ்வித செலவினமும் இல்லாமல் சலுகைகள் வழங்கப்படுகின்றன. பெற்றோர் அல்லது பாதுகாவலரது ஆண்டு வருமானம் ரூ. 2 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும். இருப்பிடத்தில் இருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8 கி.மீ.க்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவிகளுக்கு பொருந் தாது. தகுதியுடைய மாணவ, மாணவிகள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது மாவட்ட கலெக்டர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திலிருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி விடுதிகளை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர் / காப்பாளினியிடம் மற்றும் மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் வரும் 15-ம் தேதிக்குள்ளும், கல்லூரி விடுதிகளை பொறுத்தவரை 15.7.2023-க்குள்ளும் சமர்ப்பிக்க வேண்டும். மேற்கண்ட தகவலை மதுரை மாவட்ட கலெக்டர் சங்கீதா தெரிவித்துள்ளார்.

# ஆன்லைனில் வியாபாரத்தை விரிவுபடுத்த வணிக உரிமையாளர்களுக்கான குறிப்புகள்

**சென்னை, ஜூன்.5**

தொழில்முனைவு ஆய்வறிக்கையின்படி 2023 ஆண்டு இந்தியாவில் எம்எஸ்எம்இ வளர்ச்சி நம்பிக்கை தரும் வகையில் உள்ளது. ஆய்வுக்கு உட்படுத்திய சிறு தொழில் முனைவோரில் 72% தங்கள் வருவாய் வளர்ச்சி குறித்து உறுதியுடன் உள்ளனர். கூடுதலாக, 82% ஆன்லைன் வணிகத்தைத் தொடங்கியது முதல் வியாபாரம் வளர்ச்சி பெறுவதாகக் கோடாடி இந்தியா மூத்த சந்தையியல் இயக்குனர் அபூர்வா பால்நிட்கர் கூறினர்.

செயற்கை நுண்ணறிவு, எந்திரக் கற்றல், 5ஜி அறிமுகம் உள்ளிட்ட புதிய தொழில் நுட்பங்கள் முன்னெப்போதும் இல்லாத வேகத்துடன் செயல்படுவதால், ஆன்லைன் உலகின் சாதக அம்சங்களைப் பயன்படுத்திச் சிறு வணிகங்கள் நன்கு வளர்ச்சி பெற இதை விடவும் வேறு தருணம் இல்லை. அனைத்தும் டொமைன் பெயரில் தொடங்குகிறது, வலைதளத்தை வடிவமையுங்கள், உங்கள் வணிகத் திட்டத்தை மறுஆய்வு செய்யவும், வணிக ஆதரவு கட்டமைப்பை உருவாக்கவும், உங்கள் வாடிக்கையாளர்கள் விருப்பங்களைக் கவனிக்கவும் என அபூர்வா பால்நிட்கர் ஆன்லைனில் சிறு வணிகங்கள் வளர்ச்சி பெற மேற்கண்ட 5 முக்கிய குறிப்புகளை பகிர்ந்து கொள்கிறார்

# வாட்ஸ்அப் புதிய செக்யூரிட்டி சென்டரை துவங்கியுள்ளது

**சென்னை, ஜூன் 05-**

வாட்ஸ்அப் புதிதாகத் துவங்கியுள்ள குளோபல் செக்யூரிட்டி சென்டரானது.ஸ்பாமர்கள் (மோசடிக்காரர்கள்) மற்றும் தேவையில்லாத நபர்களிடமிருந்து அதன் பயனாளர்கள் தங்களை எப்படிப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை கற்பிக்கும் ஒரே இடமாக இருக்கும். வாட்ஸ்அப் மேற்கொண்டுவரும் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள், மற்றும் அதன் உள்ளமைக்கப்பட்ட தயாரிப்பு அம்சங்கள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதற்காக -வாட்ஸ்அப் இந்தப் பக்கத்தை உருவாக்கியுள்ளது.

இது பயனாளர்கள் தங்கள் பாதுகாப்பை அவரவர் கட்டுப்பாட்டில் வைப்பதற்கான அதிகாரத்தை அளிக்கிறது.எளிதான, நம்பகமான, மற்றும் தனியுரிமையைப் பேணும் மற்றும் பாதுகாப்பான வழிகளில் சேவைகளை அளிப்பதற்காக நாங்கள் பயன்படுத்தும் ‘திரைக்குப் பின்னால் இயங்கும்’ தொழில்நுட்பம் பற்றிய கூடுதல் தகவல்களையும் இந்த பக்கம் அளிக்கும். இந்த செக்யூரிட்டி சென்டர் ஆங்கிலம் மற்றும் 10 இந்திய மொழிகளில் (இந்தி, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், பெங்காலி, மராத்தி, உருது மற்றும் குஜராத்தி) பயன்பாட்டிற்குக் கிடைக்கும். வாட்ஸ்அப் செக்யூரிட்டி சென்டரை https://www.whatsapp.com/security நீங்கள் இங்கே காணலாம்.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**

# சவீதா பல் மருத்துவ கல்லூரியில் பல் மறுசீரமைப்பு குறித்த கல்வி நிகழ்ச்சி

**சென்னை, ஜூன் 5-**

சவீதா மருத்துவம் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனத்தின் சவீதா பல் மருத்துவ கல்லூரியின் பல் மருத்துவம் மற்றும் பல்நோய் சிகிச்சை துறை சார்பில் “பல் மறுசீரமைப்பு மருத்துவத்தில் புதுமை - பல் அமைப்பைப் பராமரித்தல்” என்னும் தலைப்பில் ஒரு நாள் பல் மருத்துவ கல்வி நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை இக்கல்லூரியின் துணை முதல்வர் டாக்டர் தியானேஸ்வரன் துவக்கி வைத்தார்.

இதில் கொல்கத்தாவைச் சேர்ந்த புகழ்பெற்ற பல் மருத்துவ நிபுணர் டாக்டர் திஷா அகர்வால் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்த பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு பல் மறுசீரமைப்பு சிகிச்சை தொடர்பாக விரிவாக எடுத்துக் கூறுப்பட்டது. பல் மறுசீரமைப்பு மருத்துவம், பயோமிமெடிக் என்னும் பல் அமைப்பை பராமரிக்கும் சிகிச்சை முறை ஆகியவை குறித்தும் விளக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக இது சம்பந்தமான நேரடி சிகிச்சை தொலைக்காட்சி மூலம் பார்வையாளர்களுக்கு காண்பிக்கப்பட்டது.இதில் இக்கல்லூரி மற்றும் சென்னையில் உள்ள பிற கல்லூரிகளைச் சேர்ந்த 119க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சி மாணவர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. இதில் பங்கேற்றவர்கள் பல் மறுசீரமைப்பு மருத்துவத்தில் தற்போதைய முன்னேற்றங்கள் பற்றிய பல்வேறு விஷயங்களை அறிந்து கொண்டனர்.

# யோகிஸ்வரர் சமுதாய பேரவையின் மாநில நிர்வாகிகள் குழு கூட்டம்:

**திருமங்கலம், ஜூன். 05**

மாநில யோகிஸ்வரர் சமுதாய பேரவையின் மாநில நிர்வாகிகள் குழு கூட்டம் திருச்செந்தூர் வடக்கு ரத வீதியில் உள்ள சமுதாய திருமண மண்டபத்தில் நடைபெற்றது.இந்த கூட்டம் மாநில தலைவர் எஸ்.ராஜகோபால் தலைமையில் நடை பெற்றது.கூட்டத்தில் பொது செயலாளர் பி.செல்வ கேசவன்,நிர்வாக செயலாளர் எஸ்.சுப்ரமணியன்,பொருளாளர் மு.க மாரிமுத்து, மாநில துணைத் தலைவர் ஜி.பாலசுப்பிரமணியம் ஆசிரியர்,மாநில இளைஞரணி தலைவர் டாக்டர் .கா.ராஜமுருகன், செயலாளர் ஜி.சுரேஷ், பொருளாளர் அ.ராமகிருஷ்ணன், மலர் ஆசிரியர் கே.ஐ.ரமேஷ்குமார் மற்றும் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி,தென்காசி, விருதுநகர், தேனி,திருப்பூர் மாவட்ட தலைவர்கள் இராஜபாளையம் மகா சபைக்கு புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.கூட்டத்தில் 2022- 2023 நிதியாண்டுக்காண மாநில வரவு செலவுகளை மாநில பொருளாளர் மு.க.மாரிமுத்து மற்றும் திருச்செந்தூர் திருமாலய தணிக்கையாளர் இ.முத்துகுமார் ஆகியோர் தாக்கல் செய்தனர்.

கடந்த ஆண்டு வாசுதேவநல்லூரில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் செலவு கணக்கை மாநில நிர்வாக செயளாலர் எஸ்.சுப்ரமணியன் தாக்கல் செய்தார்.மாநில கூட்டத்தில் மாவட்ட தலைவர்கள் கிளை தலைவர்கள் 2023 ஆண்டு பரிசளிப்பு விழாவிற்கு தங்கள் கருத்துகளை தெரிவித்தனர்.

2023 ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவை உறுப்பினர்களின் கருத்து கேட்கப்பட்டு வரும் ஆகஸ்ட் 13-ம் தேதி கோவில்பட்டியில் வைத்து நடைபெறுவதை மாநில தலைவர் எஸ்.ராஜகோபால் அதிகாரபூர்வமாக அறிவித்தார். கூட்டத்தில் வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் 10 ,12 ம் வகுப்பு மாணவர்காண பரிசளிப்பு விழாவிற்கு ரூபாய் 15,000 நன்கொடையை மாநில இளைஞரணி தலைவர் டாக்டர் .கா.ராஜமுருகன் மாநில தலைவரிடம் அளித்தார். இந்த விழாவில் தேசிய விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற மதுரையை சேர்ந்த தம்பி யோகராஜ் கௌரவ படுத்தப்பட்டார்.கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த உறுப்பினர்களுக்கு மதியம் அறுசுவை உணவு பரிமாறப்பட்டு கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

காணவில்லை
இராமேஸ்வரம் காட்டுப் பிள்ளையார் கோவில் தெரு, வசித்துவரும் மரிய சௌந்தரராஜன் மகள் ஹேரியட் பிரின்ஸி - க்கு கடந்த 02-03-2011 ஆம் தேதி அன்று சென்னை கோடம்பாக்கம் சார்பதிவு அலுவலக எண் 1920/ BK4/ 2008 படி செட்டில்மெண்ட் பத்திரம் இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் தாலுகா டவுன் க/எண் 33,வண்டிக்கார தெருவில் வசித்து வரும் மு.க தங்கவேலு மகன் ரவி செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்திருந்தார். மேற்படி சொத்து சம்பந்தமாக நான் கடந்த 28-05 -2021-ம் தேதி பட்டா எண் 2011 இல் தற்போது புதிய உட்பிரிவு சர்வே எண் 709/2A1,709/2A2, 709/2B ஆகிய அசல் சான்றிதழ்களை தங்கச்சிமடம் அரியாங்குண்டு பஸ் ஸ்டாப்பில் இருந்து தங்கச்சிமடம் தர்கா பஸ் ஸ்டாப்பில் உள்ள ஜெராக்ஸ் கடைக்கு ஜெராக்ஸ் எடுக்க சென்ற போது வழியில் தொலைந்து விட்டது. பல இடங்களில் தேடியும் பத்திரம் கிடைக்கவில்லை. மேற்படி அசல் ஆவணத்தை வைத்து நானும் என்னுடைய குடும்பத்தாரோ யாரிடமும் தொகையை கடனாகப் பெறவில்லை. இது தொடர்பாக நான் தங்கச்சிமடம் காவல் நிலையத்தில் 29-05-2023-ம் தேதி புகார் கொடுத்திருக்கிறேன். அதன் எண் CA1123096922 ஆகும். எனவே மேற்படி அசல் செட்டில்மெண்ட் பத்திரத்தை கண்டெடுத்து இருந்தால் எனது முகவரிக்கு தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.
இப்படிக்கு
ஹேரியட் பிரின்ஸி,
மரிய சௌந்தரராஜன்,
காட்டுப்பிள்ளையார்கோவில் தெரு,
இராமேஸ்வரம்
கைபேசி எண் -98434 212 72.

மாண்புமிகு மாவட்ட நீதிமன்றம்
இராமநாதபுரம்
I.A.No.3/2022
I.A.No.2/2022
A.S.No. /2022
1.பப்பரத்தி அம்மாள்.
2.குல்சம்பீவி,
3.சீனி மைதீன்,
....மனுதார்கள்/மேல்முறையீட்டாளர்
எதிர்
1.நூர் முகம்மது,
த/பெ.லேட்.சீனி மதார்,
9/211, மரைக்காயர் தெரு,
மண்டபம்,
இராமநாதபுரம் வட்டம் - மாவட்டம்.
2.மும்தாஜ் பேகம்,
த/பெ.லேட்.சீனி மதார்,
3.பல்லாக்கு,
த/பெ.முத்து தாஹிர்,
4.ரூபியா பானு,
க/பெ.நிஜாம்,
--ஷை-- முகவரி,
..எதிர்மனுதார்கள்/எதிர் மேல்முறையீட்டாளர்கள்
அறிவிப்பு
மேற்படி வழக்கில் கண்ட மேல்முறையீட்டாளர் எதிர்மேல்முறையீட்டாளர்கள் மீது விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதில் மேற்படி வழக்கில் கண்ட மேற்சொன்ன 2,5,9,10-ம் எதிர் மேல்முறையீட்டாளர்கள் சமூகம் நீதிமன்றத்தில் 27.06.2023 அன்று காலை 10.30 மணிக்கு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது என்றும், தவறும் பட்சத்தில் ஆட்சேபனை ஏதும் இல்லை எனக்கருதி ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.
J.முஹம்மது சுல்த்தான், B.A.B.L.,
J.M.ஹஸனுல் பஸரி, B.A.B.L.,
M.முகைதீன் இபுராம்சா, B.A.B.L.,
அட்வகேட்ஸ். இராமநாதபுரம்.

காணவில்லை
எனது பெயரில் கிரையம் பெற்ற இரண்டு பத்திரங்கள் ஆவணம் எண். 1/959/2006 நாள் 24.04.2006 மற்றும் 1/2197/2003 நாள் 22.09.2003ஆகிய இரண்டு கிரையப்பத்திரங்கள் பரமக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகும். நான் இரண்டு பத்திரங்களையும் எனது வீட்டில் தகரப் பெட்டியில் வைத்திருந்தேன். கடந்த 20.05.2023ம் நாள் முதல் 10 நாட்களாக மராமத்துப்பணிகள் செய்து சுத்தம் செய்து பெயிண்டிங் வேலைகள் பார்த்த போது நான் வைத்திருந்த மேற்படி அசல் பத்திரங்கள் இரண்டு தவறிவிட்டது. வீடு மராமத்து பணிகள் செய்து கொண்டிருக்கும் போது பழைய பொருட்கள், பேப்பர்களை எடைக்குப் போட்டேன், அதன் காரணமாகவும், பழைய பேப்பர் கடையில் சென்றும் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. மேற்படி ஆவணம் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தெரிவிக்கவும். தகவல் தெரிவிக்க வேண்டிய முகவரி
S.தங்கவேலு, த/பெ.சங்கரலிங்கம்,
4/290 அனுமாரகோவில்தெரு, பரமக்குடி-623707,
இராமநாதபுரம் மாவட்டம். செல் : 99525 80883

மாண்புமிகு மாவட்ட நீதிமன்றம்
இராமநாதபுரம்
I.A.No.3/2022
I.A.No.2/2022
A.S.No. /2022
1.சீனி மைதீன்,
2.அன்வர்
.... மனுதார்கள்/ மேல்முறையீட்டாளர்கள்
எதிர்
1.நூர் முகம்மது,
த/பெ.லேட்.சீனி மதார்,
9/211, மரைக்காயர் தெரு,
மண்டபம்,
இராமநாதபுரம் வட்டம் - மாவட்டம்.
2.மும்தாஜ் பேகம்,
த/பெ.லேட்.சீனி மதார்,
3.பல்லாக்கு,
த/பெ.முத்து தாஹிர்,
4.ரூபியா பானு,
க/பெ.நிஜாம்,
--ஷை-- முகவரி,
5.ரெ.செந்தில்குமார்,
த/பெ.ரெங்கசாமி நாடார்,
ஈகிள்ஸ் ஐ ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் பங்குதாரர்
10-5/15, முதல்மாடி,
ஸ்ரீமாங்கான் பெரியசாமி இல்லம்,
பவானி நதித்தெரு,
மகாத்மா காந்திநகர்,
மதுரை நகர் 14,
மதுரை மாவட்டம்.
.. எதிர்மனுதார்கள்/எதிர் மேல்முறையீட்டாளர்
அறிவிப்பு
மேற்படி வழக்கில் கண்ட மேல்முறையீட்டாளர் எதிர் மேல்முறையீட்டாளர்கள் மீது விளம்புகை மற்றும் உறுத்துக் கட்டளை பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதில் மேற்படி வழக்கில் கண்ட மேற்சொன்ன 2,4,5,6,11-ம் எதிர் மேல்முறையீட்டாளர்கள் சமூகம் நீதிமன்றத்தில் 27.06.2023 அன்று காலை 10.30 மணிக்கு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது என்றும், தவறும் பட்சத்தில் ஆட்சேபனை ஏதும் இல்லை எனக்கருதி ஒருதலை பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.
J.முஹம்மதுசுல்த்தான்,B.A.B.L.,
J.M.ஹஸனுல் பஸரி,B.A.B.L.,
M.முகைதீன் இபுராம்சா,B.A.B.L.,
அட்வகேட்ஸ்.
இராமநாதபுரம்.

மாண்புமிகு மாவட்ட நீதிமன்றம்
இராமநாதபுரம்
I.A.No.2/2022
A.S.No. /2022
1.சீனி மைதீன்,
2.அன்வர்
.... மனுதார்கள்/ மேல்முறையீட்டாளர்கள்
எதிர்
1.நூர் முகம்மது,
த/பெ.லேட்.சீனி மதார்,
9/211, மரைக்காயர் தெரு,
மண்டபம்,
இராமநாதபுரம் வட்டம் - மாவட்டம்.
2.மும்தாஜ் பேகம்,
த/பெ.லேட்.சீனி மதார்,
3.பல்லாக்கு,
த/பெ.முத்து தாஹிர்,
4.ரூபியா பானு,
க/பெ.நிஜாம்,
--ஷை-- முகவரி,
5.ரெ.செந்தில்குமார்,
த/பெ.ரெங்கசாமி நாடார்,
ஈகிள்ஸ் ஐ ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் பங்குதாரர்
10-5/15, முதல்மாடி,
ஸ்ரீமாங்கான் பெரியசாமி இல்லம்,
பவானி நதித்தெரு,
மகாத்மா காந்திநகர்,
மதுரை நகர் 14,
மதுரை மாவட்டம்.
.. எதிர்மனுதார்கள்/எதிர் மேல்முறையீட்டாளர்
அறிவிப்பு
மேற்படி வழக்கில் கண்ட மேல்முறையீட்டாளர் எதிர் மேல்முறையீட்டாளர்கள் மீது விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதில் மேற்படி வழக்கில்கண்ட மேற்சொன்ன 2,4,5,6,11-ம் எதிர் மேல்முறையீட்டாளர்கள் சமூகம் நீதிமன்றத்தில் 27.06.2023 அன்று காலை 10.30 மணிக்கு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது என்றும், தவறும் பட்சத்தில் ஆட்சேபனை ஏதும் இல்லை எனக்கருதி ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.
J.முஹம்மது சுல்த்தான்,B.A.B.L.,
J.M.ஹஸனுல் பஸரி,B.A.B.L.,
M.முகைதீன் இபுராம்சா,B.A.B.L.,
அட்வகேட்ஸ்.
இராமநாதபுரம்.

# 10-ஆம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு ஊக்கத் தொகையினை ஒன்றிய செயலாளர் தர்மராஜன் வழங்கினார்



**ஒட்டன்சத்திரம்.ஜூன்.05**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம், விருப்பாட்சியில் முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணியின் ஆலோசனையின் பேரில், விருப்பாட்சி ஆர்.சி. பள்ளியில் 10-ஆம் வகுப்பு தேர்வில் முதலிடம் பிடித்த மாணவிக்கு ரூ.10 ஆயிரமும், இரண்டு, மூன்றாம் இடம் பிடித்த மாணவிகளுக்கு தலா ரூ.5 ஆயிரமும் ஊக்கத் தொகையினையும் கல்வி உபகரணங்களையும் ஒன்றிய செயலாளர் தர்மராஜன் வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக்வேலுச்சாமி, ஊராட்சிமன்ற தலைவர் மாலதிவெண்ணிலா, ஒன்றிய பொருளாளர் குப்புச்சாமி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பழனிச்சாமி உள்ளிட்ட நிர்வாகிகள், பொதுமக்கள் உடனிருந்தனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூரில் திமிங்கலம் எச்சம் வைத்திருந்த ஐந்து நபர்கள் கைது



**விருதுநகர் ஜூன் 5.**

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் திமிங்கலம் எச்சத்தை பதுக்கி வைத்திருந்த ஐந்து பேரை வனத்துறையினர் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர். மான்,புலி உள்ளிட்ட விலங்குகளோடு திமிங்கலமும் அட்டவணையில் உள்ள நீரில் வாழும் விலங்காகும். இதன் உடல் உறுப்புகள் மற்றும் கழிவுகள், எச்சம் உள்ளிட்டவைகள் மருத்துவ குணம் வாய்ந்ததாக நம்பப்படுகிறது.

மேலும் அரபு நாடுகளில் தயாரிக்கப்படும் வாசனை திரவியங்களில் திமிங்கல எச்சத்தை சேர்க்கும்போது வாசனை திரவியத்தில் உள்ள வாசம் பல நாட்களுக்கு நீடித்திருக்கும் என கூறப்படுகிறது.

இந்நிலையில் திருநெல்வேலியைச் சேர்ந்த அப்துல் ரகுமான், கேரளாவைச் சேர்ந்த பத்மகுமார், விருதுநகரை சேர்ந்த மனோகரன், தர்மராஜ், ராஜமன்னார் ஆகியோர் திமிங்கலம் எச்சத்தை வைத்திருப்பதாக வனத்துறை சிறப்பு பிரிவிற்கு தகவல் வந்ததையடுத்து வனத்துறை சிறப்பு படை பிரிவு அதிகாரி மனிஷா அலிமா மற்றும் மலர்வண்ணன் தலைமையிலான வனத்துறையினர் திமிங்கலம் எச்சத்தை வைத்திருந்த மேற்படி 5 நபரையும் கைது செய்து அவர்களிடமிருந்து 2 இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் திமிங்கல எச்சத்தையும் பறிமுதல் செய்து ஸ்ரீவில்லிபுத்தூர் வனச்சரகர் வசம் ஒப்படைத்தனர். தொடர்ந்து பிடிபட்ட ஐந்து பேரிடமும் விசாரணை நடத்திய வனத்துறையினர் ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 2ல் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்

# இன்று உலக சுற்றுச்சூழல் தினம் : கழனிகளையும் காடுகளாக்குவோம்

**சென்னை ஜூன் 05-**




சுற்றுப்புறசூழல் பாதுகாப்பு குறித்து ஒரு புறம் பெரிய அளவில் பேசப்பட்டு வந்தாலும், மறுபுறம் நீரும், நிலமும், காற்றும் மாசுபட்டுக் கொண்டேதான் இருக்கின்றன. இம்மூன்றும் மாசடையாமல் இருக்க நாம் என்ன செய்ய வேண்டும், அதில் நம் பங்கு எவ்வாறு இருக்கலாம் என்பதை சிந்திக்க வேண்டிய சூழலில் இருக்கிறோம்.

மத்திய, மாநில அரசுகள் பல்வேறு இயக்கங்களைத்தொடங்கி பெருவாரியான நிதிகளையும் ஒதுக்கி சூழல் கேடுகளை களைய முற்பட்டும் திருப்தியான நிலையை எட்ட முடியவில்லை. நாளுக்கு நாள் புறநகர் பகுதிகள் குப்பை மேடுகளாக மாறி வருகிறது. நம்மை சுற்றி ஓடும் நதிகளும் சாக்கடை நீர் கலந்து பயன்படுத்த முடியாத நிலைக்கு தள்ளிவிட்டிருக்கிறோம்.

ஏரிகளில் ஆகாயத்தாமரை செடிகள் ஆக்கிரமித்துள்ளது. குடிநீருக்கு பயன்படுகின்ற ஏரியிலேயே கழிவுநீரை குழாய் அமைத்து கொண்டு போய் விடுகின்ற மனிதர்களும் நம்மோடு தான் இருக்கின்றனர். சுற்றுச்சூழல் நாளுக்கு நாள் கெட்டு கொண்டே தான் இருக்கிறது.

தானாக மாறும் என சுற்றுச்சூழலில் நாம் அலட்சியமாக இருந்துவிட கூடாது. ஏதாவது ஒன்றை சூழல் மேம்பாட்டுக்காக நாம் செய்ய வேண்டிய தருணத்தில் இருக்கிறோம். ஆண்டுக்கு சில மரங்களையாவது நாம் வசிக்கும் பகுதியில் நட்டு பராமரித்து சுற்றுச்சூழலுக்கு துணையாக இருக்கலாம்.

மரங்களே இல்லாத சாதாரண நிலப்பரப்பில் மழை பெய்யும் போது மழை நீரில் மூன்று விழுக்காடே பூமியினுள் உறிஞ்சப்படுகிறது. மீதமுள்ள 97 விழுக்காடு நீர் உடனடியாக ஓடி விடுகின்றது. ஆனால் காடுகளில் பெய்யும் மழை நீரில் 33 விழுக்காடு உள்ளிழுக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகிறது.

மரங்கள் செய்யும் இன்னும் ஒரு மகத்தான சேவை மண்ணரிப்பைத் தடுப்பது. மரங்களின் வேர்கள் பரந்து விரிந்து கிடப்பதால் அவை அவைகளைச் சுற்றியுள்ள மண்பரப்பைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்கின்றன. மரங்கள் இல்லையெனில் சத்துள்ள நிலப்பரப்பு மண் எளிதில் பெய்யும் மழையால் அடித்துச் செல்லப்படும்.

சத்துள்ள மண் அரித்துச் செல்லப்படுவதால் பயிர் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

மண் அரிப்பு, மண்படிதல், நிலநடுக்கம், நிலச்சரிவு புழுதிப் புயல் போன்றவை ஏற்படாதிருக்க காடுகள் பெரிதும் பயன்படுகின்றன.

70 சதவீதம் விவசாயிகளை கொண்ட நம் நாட்டில் விவசாயிகள் தங்கள் நிலங்களின் ஒரு குறிப்பிட்ட பகுதியை மரங்கள் வளர்ப்பிற்கு ஒதுக்க வேண்டும். வயல் வரப்புகளில் கிழக்கு மேற்காக மரங்கள் நடுவதை உடனடியாக தொடங்க வேண்டும். அப்போதுதான் சூழல் சமநிலையுடன் இருக்கும். சுற்றுச்சூழல் பாதுகாப்பில் விவசாயிகளின் பங்களிப்பு மகத்தானது. விவசாயிகள் நடும் மரங்களால் விவசாயிகளின் உர செலவும், பூச்சிக்கொல்லி மருந்துகளின் செலவும் பாதியாக குறையவும் வாய்ப்பு இருக்கிறது.

கடந்த 30 வருடங்களில் 17 லட்சம் மரம் நட்டு மரங்களின் பூமியாக அப்பகுதியை மாற்றியுள்ளது இரண்டாவது நிலக்கரி சுரங்கம் வெட்ட கைவசப்படுத்தப்பட்ட பகுதிகளில் 37 லட்சம் மரங்களை நட்டு வளர்த்து வருகிறது. இவற்றில் மூங்கில், தேக்கு, புளியன், இலுப்பை, புங்கன், வேம்பு போன்று பயன்படும் மரங்களும் அடங்கும். அரசுத் துறை நிறுவனமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் போன்று தனியார் நிறுவனங்களும் சூழல் மேம்பாட்டுக்காக மரங்கள் வளர்க்க முன்வர வேண்டும். காடுகளின் பரப்பளவை 33 விழுக்காடாக்க நாம் கழனிகளையும் காடாக்குவோம்.

கிரீன் நீடா சுற்றுச்சூழல் அமைப்புதலைமை ஒருங்கிணைப்பாளர் மு.ராஜவேலு என்றார்

# நத்தம் அருகே மழைக்கு வீடு இடிந்து பொருட்கள் சேதம்



**நத்தம், ஜூன், 5**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே மூங்கில்பட்டி பழைய தெருவை சேர்ந்தவர் சந்திரன் (65). இந்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதில் இவரது சென்ட்ரிங் வீடு இடிந்து விழுந்தது. இதில் வீட்டில் இருந்த டிவி, பேன், பாத்திரங்கள் சேதமடைந்தது. வீட்டில் யாரும் இல்லாததால் அதிர்ஷ்டவசமாக உயிர் சேதம் ஏற்படவில்லை. மேலும் இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் விசாரணை நடத்தினர்.

# இந்தியாவில் ஏசர் அற்புதமான ரகங்களில் கூகிள் டிவிகளை அறிமுகம் செய்துள்ளது

**சேலம், ஜூன் 05-**

இந்தியாவில் ஏசர் பிராண்டின் புதிய கூகிள் டிவி ரகங்களை இண்ட்கல் டெக்னாலஜிஸ் புதுதில்லியில் நடைபெற்ற ஒரு மெகா நிகழ்வின் போது அறிமுகப்படுத்தியது. இந்த நிகழ்வில் பல்வேறு ஸ்கிரீன் அளவுகள், காட்சி தொழில்நுட்பங்கள் மற்றும் விலைப் பிரிவுகளில் பல ரகங்களில் தயாரிப்புகளை வெளியிட்டது. அறிவிக்கப்பட்ட தயாரிப்புகளில், OLED டிஸ்ப்ளே மற்றும் பெரிய வூஃபர்களுடன் கூடிய 60-வாட் ஸ்பீக்கர் சிஸ்டம் கொண்ட ஃபிளாக்ஷிப் ஓ சீரிஸ் டிவிகள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. OLED டிவிகள் 55 இன்ச் மற்றும் 65 இன்ச் ஆகிய இரண்டு அளவுகளிலான ரகங்களாக வெளியிடப்படவுள்ளன.

கண்ணைக் கவரும் பிற தயாரிப்புகளில், V சீரிஸின் கீழ் ஒரு புரட்சிகரமான கட்டுப்படியாகும் விலையில் QLED ரக டிவிகளையும் அறிமுகப்படுத்தியது, இதனால் வாடிக்கையாளர்களால் மலிவான விலையில் மேம்பட்ட QLED காட்சிகளை கண்டு ரசிக்க முடியும். இந்தியாவில் இது போன்ற டிவிகள் பொதுவாக வெகுஜனங்களுக்கு அணுக முடியாத விலை வரம்பில் உள்ளன. வழக்கமான 43-இன்ச், 50-இன்ச் மற்றும் 55-இன்ச் டிவி வகைகளுடன் 32-இன்ச் டிவியின் QLED ரகம் கிடைப்பது ஒரு இன்ப அதிர்ச்சியாகும்.

# ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி, டாடா மெமோரியல் சென்டர்-க்கு ரூ.1,200 கோடி பங்களிப்பை அளிக்கிறது

**கோவை, ஜூன் 05-**

நாடு முழுவதும் புற்றுநோய் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையங்களை நடத்தும் ஒரு புகழ்பெற்ற நிறுவனமான டாடா மெமோரியல் சென்டருக்கு ரூ.1,200 கோடி பங்களிப்பதற்கான ஒரு அர்ப்பணிப்பை ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி அறிவித்தது. ஐ.சி.ஐ.சி.ஐ. ஃபவுண்டேஷன், இந்த உறுதிப்பாட்டை வெளிப்படுத்த டிஎம்சியுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஐசிஐசிஐ ஃபவுண்டேஷன் இன் தலைவர் சஞ்சய் தத்தா மற்றும் டாடா மெமோரியல் சென்டர் இன் இயக்குநர் டாக்டர். ஆர். ஏ. பட்வே ஆகியோர் ஐசிஐசிஐ வங்கியின் தலைவர் திரு. கிரிஷ் சந்திர சதுர்வேதி மற்றும் ஐசிஐசிஐ வங்கியின் செயல் இயக்குநர் சந்தீப் பத்ரா ஆகியோரது முன்னிலையில் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

கூடுதலாக, சதுர்வேதி மும்பை இல் பரேல் இல் உள்ள டாடா மெமோரியல் மருத்துவமனையில் ஐ.சி.ஐ.சி.ஐ.எம்.ஆர்.ஐ. வசதியை டாக்டர் பத்வே மற்றும் பத்ரா முன்னிலையில் துவங்கி வைத்தார். இந்த வசதியானது, ஐசிஐசிஐ ஃபவுண்டேஷன் ஆல் ஆதரிக்கப்படும் மேம்பட்ட எம்ஆர்ஐ இயந்திரத்துடன் பொருத்தப்பட்டுள்ளது. இந்த விழாவில் பேசிய ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியின் தலைவர் கிரிஷ் சந்திர சதுர்வேதி கூறுகையில், ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி தேசத்தின் சேவையில் ஒரு நீண்ட கால பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. இந்த புதிய கட்டிடங்கள் பிராந்திய பரிந்துரை மையங்களாகவும் சேவை செய்யும் மற்றும் மும்பையில் பரேல் இல் உள்ள டாடா மெமோரியல் மருத்துவமனைக்கு நோயாளிகள் நீண்ட தூரம் செல்ல வேண்டிய அவசியத்தை குறைக்கும்.'' என்று கூறினார். இது குறித்து டாடா மெமோரியல் சென்டர் இன் இயக்குநர் டாக்டர் ஆர். ஏ. பட்வே கூறுகையில், நாடு முழுவதும் புற்றுநோய் சிகிச்சையை மேம்படுத்துவதற்கான மிகப் பெரிய சிஎஸ்ஆர் முயற்சிகளில் ஒன்றான ஐசிஐசிஐ ஃபவுண்டேஷன் க்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். நவி மும்பை, விசாகப்பட்டினம் மற்றும் முல்லன்பூரில் உள்ள டாடா மெமோரியல் சென்டர் இன் இந்த மூன்று மருத்துவமனைகளில் சேர்க்கப்படும். மேம்பட்ட புற்றுநோய் சிகிச்சை வீட்டிற்கு அருகாமையில் வழங்கப்படுவது மிகவும் முக்கியமானது என்று கூறினார்.

# கோபால்பட்டி அருகே தடுப்புச்சுவரில் மோதிய லாரி

**நத்தம் ஜூன்,5**

ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலத்தில் இருந்து விறகு லோடு ஏற்றிக்கொண்டு திருப்பூர் செல்வதற்காக லாரி ஒன்று சென்று கொண்டிருந்தது. லாரியை திருவாடனையை சேர்ந்த ஆதிமூலம் (வயது 40) என்பவர் ஓட்டி வந்தார்.இந்த நிலையில் திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே கோபால்பட்டி பகுதியில் வந்தபோது டிரைவர் தூக்க கலக்கத்தில் இருந்ததால் எதிர்பாராத விதமாக கட்டுப்பாட்டை மீறி சாலையின் நடுவே இருந்த தடுப்புச் சுவரில் லாரி மோதி விபத்து ஏற்பட்டது.

இதில் லாரியின் முன்பகுதி சேதம் அடைந்து ஒரு பக்கமாக சாய்ந்த நிலையில் இருந்தது.லாரி டிரைவர் ஆதிமூலம் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.இதையடுத்து கிரேன் உதவியுடன் லாரியை மீட்டனர்.மேலும் இந்த சம்பவம் குறித்து சாணார்பட்டி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சிறுமியை பாலியல் தொந்தரவு செய்த குற்றவாளிக்கு 20 ஆண்டு சிறை

**விருதுநகர், ஜூன்.5.**

சாத்தூர் அருகே மனவளர்ச்சி குன்றிய சிறுமியை பாலியல் வல்லுறவு செய்த வழக்கில் கைது செய்யப்பட்ட குற்றவாளிக்கு போக்சோ சிறப்பு நீதிமன்றம் மூன்றே மாதத்தில் 20 ஆண்டு சிறை தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளது.

சாத்தூர் அருகே உள்ள மேட்டமலையைச் சேர்ந்தவர் மணிகண்டன்(32). இவர் மனநலம் குன்றிய சிறுமியை கடந்த பிப்.,27 இல் பாலியல் வல்லுறவு செய்துள்ளார். இதையடுத்து, மதுரை சரக காவல்துறை துணைத் தலைவர் பொன்னி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாச பெருமாள் ஆகியோர் அறிவுறுத்தலின் பேரில்அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் மணிகண்டனை கைது செய்தனர். மேலும், , இந்த வழக்கானது, திருவில்லிபுத்தூரில் உள்ள போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்நிலையில் வழக்கை ஜூன்.,1அன்று விசாரித்த நீதிபதி, குற்றவாளி மணிகண்டனுக்கு 20 ஆண்டு சிறை தண்டனை மற்றும் ரூ.2 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கில் 45 நாட்களில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்தில் குறுகிய காலத்தில் சாட்சிகளை ஆஜர்படுத்தியதால் விரைவாக குற்றவாளிக்கு தண்டனை கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பரமக்குடி 32-வது வார்டு மாதவன் நகரில் புதிதாக ஆழ்குழாய் கிணறுடன் கூடிய குடிநீர் தொட்டியை நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி திறந்து வைத்தார்



**பரமக்குடி,ஜூன் 05.**

பரமக்குடி நகராட்சிக்கு உட்பட்ட 32-வது வார்டு மாதவன் நகரில் புதிதாக ஆழ்குழாய் கிணறுடன் கூடிய குடிநீர் தொட்டியை பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி மக்கள் பயன்பாட்டுக்காக திறந்து வைத்தார். பரமக்குடி நகராட்சி சார்பில் குடிநீர் விநியோக நிதியின் கீழ் 32 வது வார்டு மாதவன் நகரில் ரூ.6 லட்சத்தில் புதிதாக ஆழ்குழாய் கிணறுடன் கூடிய குடிநீர் தொட்டி கட்டப்பட்டுள்ளது. அதன் திறப்பு விழா நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி தலைமையில் நடந்தது. நகராட்சி ஆணையாளர் திருமால் செல்வம், நகராட்சி பொறியாளர் மீரா அலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். 32 வது வார்டு நகர் மன்ற உறுப்பினரும் அ.தி.மு.க. நகர் ஜெயலலிதா பேரவை செயலாளருமான வட மலையான் பொன்னாடை அணிவித்து வரவேற்றார். அதைத் தொடர்ந்து நகர மன்ற தலைவர் சேது கருணாநிதி குடிநீர் தொட்டியை திறந்து வைத்தார். இதில் தி.மு.க. நகர் துணைச் செயலாளர் வேலவன், நகர் பொருளாளர் ஜானகிராமன், முன்னாள் பொறுப்புக் குழு உறுப்பினர் கலில் ரகுமான், 33 வது வார்டு செயலாளர் வீரபாண்டியன், 22 வது வார்டு செயலாளர் ரமேஷ், அ.தி.மு.க. நிர்வாகிகள் திருமுருகன், பாண்டி, பாலா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அருப்புக்கோட்டையில் இடி மின்னல் சூறாவளி காற்றுடன் ஆலங்கட்டி மழை: மரங்கள், ட்ரான்ஸ்பார்மர் சாய்ந்தன



**அருப்புக்கோட்டைஜூன் 5**

அருப்புக்கோட்டை சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக கடும் வெயில் சுட்டெரித்து வந்தது இந்நிலையில் நேற்று மாலை திடீரென கருமேகங்கள் சூழ்ந்து புளியம்பட்டி காந்தி நகர் நெசவாளர் காலனி ஆத்திப்பட்டி விருதுநகர் ரோடு பாளையம்பட்டி ராமசாமிபுரம் உள்ளிட்ட சுற்று வட்டார பகுதியில் சூறைக்காற்றுடன் பேய் மழை கொட்டி தீர்த்தது. சுமார் 1 மணி நேரத்துக்கு மேலாக கொட்டி தீர்த்த பேய் மழையால் அருப்புக்கோட்டை நகரமே புயலால் புரட்டி போட்டது போல் ஆங்காங்கே மரங்கள் மின் கம்பங்கள் டிரான்ஸ்பார்மர்கள் செல்போன் டவர்கள் சாய்ந்து உடைந்து சாலையில் விழுந்தது. புளியம்பட்டி, வேலாயுதபுரம், நெசவாளர் காலனி, ஆத்திபட்டி, காந்திநகர், விருதுநகர் ரோடு, மதுரை ரோடு, புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், பாளையம்பட்டி உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் 100க்கும் மேற்பட்ட மரங்கள் வேரோடு சாய்ந்து மின் வயர்கள் மீது விழுந்தது தற்காலிக பேருந்து நிலையம் முழுவதும் மழைநீர் சூழ்ந்ததால் பேருந்துகள் உள்ளே வர முடியாமல் பயணிகள் கடும் அவதி அடைந்து வருகின்றனர்.

அருப்புக்கோட்டையில் ஒரே ஒரு தீயணைப்பு வாகனம் மட்டுமே இருப்பதால் மீட்பு பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. தற்போது வரை தன்னார்வலர்கள் மட்டுமே ஆங்காங்கே சாலையில் விழுந்து கிடக்கும் மரங்களை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே மாவட்ட நிர்வாகம் மாவட்டத்தில் வேறு பகுதியில் உள்ள நகராட்சி மற்றும் மின்வாரிய அலுவலர்களை விரைவாக அருப்புக்கோட்டை நகருக்கு அழைத்து வந்து வேரோடு சாய்த்து கொள்ள மரங்கள் மற்றும் மின் வயர் டிரான்ஸ்பார்மர்களை சீரமைத்து விரைவாக நகர மக்களுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை வேண்டும். இந்தக் சூறைக்காற்றுடன் பெய்த கன மழையால் அருப்புக்கோட்டை நகருக்குள் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# மேஜிக் இங்கிலீஷ் லேர்னிங் படி என்ற தமிழக அரசின் புதிய திட்டம் துவக்கம்


**சென்னை ஜூன் 05-**

சமூக பாதுகாப்பு துறையின் மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், மேஜிக் இங்கிலீஷ் லேர்னிங் படி என்ற புதிய செயல்திட்டத்தை, அரசு நடத்தும் 36 குழந்தை பராமரிப்பு நிலையங்களில் தொடங்கியிருக்கிறது.

கரடி பாத் கல்வியியலின் ஆதரவோடு உருவாக்கப்பட்டிருக்கும் ஆசிரியருக்கான ஒரு ஆன்ராய்டு செயலியும் இதனோடு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது. கரடி பாத் எஜுகேஷன் கம்பெனியால் உருவாக்கப்பட்ட இச்செயல் திட்டத்தை சமூக பாதுகாப்பு துறையின் இயக்குநரும் மற்றும் மாநில குழந்தை பாதுகாப்பு சங்கத்தின் செயலருமான அமர் குஷாவா தொடங்கி வைத்தார்.

ஆங்கில மொழித்திறன் மேம்பாடு செயல்திட்டமான மேஜிக் இங்கிலீஷ் லேர்னிங் படி என்பது அரசால் நடத்தப்பட்டுவரும் குழந்தை பராமரிப்பு நிலையங்களில் உள்ள குழந்தைகளுக்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

இச்செயல்திட்ட தொடக்க விழாவின்போது சமூக பாதுகாப்பு துறையின் இயக்குநரும், மாநில குழந்தை பாதுகாப்பு சங்கத்தின் செயலருமான அமர் குஷாவா, இந்திவழி கல்வி கற்பிக்கும் உத்தரபிரதேசத்தின் ஒரு கிராம பள்ளியில் தனது வாழ்க்கையை தொடங்கி தமிழ் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளை மிக சரளமாக பேசுகிற திறன்பெற்று தமிழகத்தில் ஒரு இந்திய ஆட்சி பணியாளராக முன்னேற்றமடைந்திருக்கும் தனது வாழ்க்கை பயணம் பற்றி பகிர்ந்துகொண்டார்.



**டாலர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்தின் எமரிட்டஸ் தலைவர் ஸ்ரீ தின் தயாள் குப்தாவின் வாழ்க்கை வரலாறு புத்தகத்தை, குஜராத் ஆளுநர் ஸ்ரீ ஆச்சார்யா தேவ்ரத் வெளியிட்டார். சர்வதேசிக் ஆர்ய பிரதிநிதி சபாவின் தலைவர் ஸ்ரீ சுரேஷ் சந்திரா மற்றும் டெல்லி கவுதம் நகர் குருகுலத்தின் டீன் சுவாமி பிரன்வானந்த் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. ரூபா பப்ளிகேஷன் வெளியிட்ட இந்த புத்தகத்தை, மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான ஸ்ரீ பிரதீப் கூப்து எழுதியுள்ளார்.**

# 2024 ஜனவரியில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார் டேவிட் வார்னர்



**லண்டன், ஜூன்.05**

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தொடக்க ஆட்டக்காரர் டேவிட் வார்னர், அடுத்த ஆண்டு (2024) ஜனவரியில் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஓய்வு பெற உள்ளதாக அறிவித்துள்ளார். தனது சொந்த ஊரான சிட்னியில் தனது கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாட விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதன்படி வரும் ஜனவரியில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின் போது அவர் ஓய்வு பெறுகிறார்.

வரும் 7-ம் தேதி நடைபெற உள்ள உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்காக அவர் தயாராகி வருகிறார். இந்திய அணிக்கு எதிரார் இந்தப் போட்டி இங்கிலாந்தின் லண்டனில் உள்ள ஓவல் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற உள்ளது. தொடர்ந்து இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆஷஸ் தொடரிலும் வார்னர் விளையாட உள்ளார்.

36 வயதான அவர் இந்தியாவில் வரும் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடைபெறவுள்ள ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரிலும் அவர் விளையாட உள்ளார். இருந்தும் தனது டெஸ்ட் கிரிக்கெட் கேரியரை சிட்னியில் நிறைவு செய்ய விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார்.

"ரன் எடுக்க வேண்டியது முக்கியம். வரும் 2024-ல் நடைபெறவுள்ள டி20 கிரிக்கெட் உலகக் கோப்பை தொடர் தான் எனது கடைசி போட்டியாக இருக்கும். நான் எனது குடும்பத்திற்கு நிறைய கடன் பட்டுள்ளேன். பாகிஸ்தான் தொடரோடு டெஸ்ட் கேரியரை நிறைவு செய்து கொள்ள உள்ளேன். அதற்கு முன்னதாக உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் மற்றும் ஆஷஸ் உள்ளது" என வார்னர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2011 முதல் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடி வருகிறார் வார்னர். இதுவரை 103 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி, 8,158 ரன்கள் குவித்துள்ளார். 25 சதங்கள் மற்றும் 34 அரை சதங்கள் இதில் அடங்கும். அதிகபட்சமாக 335 (நாட் அவுட்) ரன்கள் குவித்துள்ளார்.

### 2வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி:

# ஆப்கானிஸ்தானை வீழ்த்தி இலங்கை அபார வெற்றி



**கொழும்பு,ஜூன்.05**

ஹம் பாந் தோட்டை, இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. இதில் முதலவது ஒரு நாள் போட்டியில் 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் 1-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 2வது ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற இலங்கை முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. இதையடுத்து தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கிய நிசாங்கா 43 ரன்னிலும், கருணாரத்னே 52 ரன்னிலும் ஆட்டம் இழந்தனர்.

இதையடுத்து களம் இறங்கிய குசல் மெண்டிஸ் அதிரடியாக விளையாடி 78 ரன்னும், சதீரா சமரவிக்ரமா 44 ரன்னும் எடுத்தனர். தொடர்ந்து அசலங்கா 6 ரன், ஷனகா 23 ரன்னிலும் ஆட்டம் இழந்தனர். இறுதியில் இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 323 ரன்கள் குவித்தது. இதையடுத்து 324 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களம் இறங்கியது.

அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கிய ரஹ்மனுல்லா குர்பாஸ் 2 ரன்னில் வீழ்ந்தார். இதையடுத்து இப்ராகிம் ஜட்ரானுடன் ரஹ்மத் ஷா ஜோடி சேர்ந்தார். இதில் ரஹ்மத் ஷா 36 ரன்னில் வீழ்ந்தார். இதையடுத்து களம் இறங்கிய ஹஷ்மத்துல்லா ஷாகிடி, ஜட்ரான் இணை நிதானமாக ஆடி அணியின் ஸ்கோரை உயர்த்தியது. இதில் இருவரும் அரைசதம் அடித்து அசத்தினர். இருவரும் அரைசதம் அடித்த நிலையில் ஜட்ரான் 54 ரன்னிலும் , ஷாகிடி 57 ரன்னிலும் வீழ்ந்தனர். அடுத்த வந்த வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டம் இழக்க ஆப்கானிஸ்தான் அணி 42.1 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 191 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது. இதையடுத்து இலங்கை அணி 132 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 1-1 என்ற கணக்கில் இலங்கை அணி சமன் செய்தது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான தொடர் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் 3வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி வரும் 7ம் தேதி நடைபெறுகிறது.

### ஐ.பி.எல், ரஞ்சி போட்டியைப் போல்

# உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப்பிலும் அபாரமாக விளையாடுவேன்: ரஹானே



**போர்ட்ஸ்மவுத்,ஜூன்.05**

ஐபிஎல், ரஞ்சி கோப்பை கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியது போன்று உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப்பிலும் அபாரமாக விளையாடுவேன் என்று இந்திய அணி வீரர் அஜிங்கிய ரஹானே தெரிவித்துள்ளார்.

இந்தியா, ஆஸ்திரேலிய அணிகள் மோதும் உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் போட்டி வரும் 7-ம் தேதி லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் தொடங்கவுள்ளது. இதில் வெல்லும் அணி உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் பட்டத்தைக் கைப்பற்றும்.

போட்டியில் பங்கேற்பதற்காக இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் லண்டன் சென்றுள்ளனர். இந்நிலையில் இந்திய அணி வீரர் ரஹானே போர்ட்ஸ்மவுத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

18 மாதங்களுக்குப் பிறகு இந்திய அணியில் நான் இடம் பிடித்துள்ளேன். நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்திய அணியில் இணைந்து விளையாடுவது மகிழ்ச்சி. இத்தனை நாள் அணியில் இடம்பெறாமல் போனதற்காக வருத்தப்படப் போவது இல்லை. நடந்தவை நல்லதாக இருந்தாலும் சரி, கெட்டதாக இருந்தாலும் சரி, கடந்த காலத்தைப் பற்றி நினைக்கப் போவது இல்லை. நான் புதிதாக ஆரம்பித்து என்ன செய்து கொண்டி ருந் தேனோ அதைத் தொடர்ந்து செய்ய விரும்புகிறேன்.

சமீபத்தில் ஐபிஎல் தொடரில் சிறப்பாக விளையாடினேன். அதற்கு முன்பாக ரஞ்சிக் கோப்பை போட்டியிலும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினேன். உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக விளையாடி ரன் குவித்ததால் அதிக நம்பிக்கை கிடைத்துள்ளது. அந்தப் போட்டிகளில் விளையாடியது போன்றே உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்பிலும் எனது ஆட்டத்தை வெளிப்படுத்துவேன். ஐபிஎல் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் (சிஎஸ்கே) அணிக்காக விளையாடியது எனக்குக் தனிப்பட்ட மகிழ்ச்சி. இந்த சீசன் முழுமையாகவும் நான் எனது இயல்பான ஆட்டத்தை விளையாடினேன். தற்போதுள்ள இந்திய அணியில் உள்ள கலாசாரம் சிறப்பாக இருக்கிறது. அணியை கேப்டன் ரோஹித் சர்மா சிறப்பாக வழிநடத்திச் செல்கிறார். ஒவ்வொரு வீரரும் தனித்தன்மையுடன் இருக்கின்றனர்.

நான் தேசிய அணியில் இடம்பெறாத நிலையில், எனக்காக ஆதரவு காட்டிய குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் நன்றி. நான் அணியிலிருந்து நீக்கப்பட்ட பிறகு கடினமாக உணர்ந்தேன். எனது குடும்பத்தினரின் ஆதரவுடன் மீண்டு வந்தேன். என் மீது நம்பிக்கை வைத்து என்னை அணிக்குத் தேர்வு செய்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்துக்கும் (பிசிசிஐ), தேர்வுக் குழுவினருக்கும் நன்றி. இவ்வாறு அவர் கூறினார். இதுவரை 82 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ரஹானே 4,931 ரன்களைக் குவித்துள்ளார்.

மேலும் 2021-ம் ஆண்டில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் ரஹானே இந்திய அணிக்குத் தலைமை தாங்கி தொடரையும் வென்று கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆஸ்திரேலிய வீரர்களுக்கு இந்திய பவுலர்கள் அச்சுறுத்தலாக இருப்பார்கள் - மார்னஸ் லபுஷேன் கணிப்பு

**லண்டன், ஜூன்.05**

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியின்போது ஆஸ்திரேலிய வீரர்களுக்கு இந்திய பவுலர்கள் அச்சுறுத்தலாக இருப்பார்கள் என்று ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி வீரர் மார்னஸ் லபுஷேன் தெரிவித்தார்.

இந்தியா, ஆஸ்திரேலிய அணிகள் மோதும் உலக கிரிக்கெட் டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டி வரும் 7-ம் தேதி தொடங்கி 11-ம் தேதி நிறைவடையவுள்ளது. இந்த போட்டி லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்த போட்டி குறித்து ஆஸ்திரேலிய அணியின் நட்சத்திர பேட்ஸ்மேன் மார்னஸ் லபுஷேன் கூறியதாவது:

நான் அணியில் 3-வது வீரராக களமிறங்கி விளையாடி வருகிறேன். என்னால் முடிந்த அளவு அதிக ஆட்டங்களில் ரன்களை குவிப்பதற்கும் பங்களிப்பதற்கும் பல வழிகளைக் கண்டறிய வேண்டும். இங்கிலாந்து மைதானம் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும் என்பதால் இந்திய அணியில் மொகமது ஷமி, மொகமது சிராஜ், உமேஷ் யாதவ் ஆகியோரை தேர்வு செய்துள்ளது. ஓவல் மைதானத்தில் இந்திய பந்து வீச்சாளர்கள், ஆஸ்திரேலிய வீரர்களுக்கு சவாலாகவும், அச்சுறுத்தலாகவும் இருப்பார்கள். நாங்கள் இந்திய அணிக்கு எதிராக பார்டர் கவாஸ்கர் கோப்பையில் விளையாடினோம். அவர்கள் எப்படி விளையாடுவார்கள் எப்படி பந்து வீசுவார்கள் என்பது குறித்த நுணுக்கங்களை கற்று வைத்துள்ளோம். இந்திய பவுலர்களை சமாளிக்கும் வியூகங்களை நாங்கள் வகுத்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

# என் மகனுக்கு நான் கொடுக்கும் அட்வைஸ் இதுதான்: மனம் திறந்த சச்சின் டெண்டுல்கர்

**மும்பை, ஜூன்.05**

தனக்கு இளம் வயதில் கிடைத்த சுதந்திரமான சூழலை தனது மகனுக்கும் உருவாக்க முயற்சி செய்துவருவதாக சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

'சின்ட்டிலேட்டிங் சச்சின்' என்ற புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய சச்சின் டெண்டுல்கர் கூறியதாவது:

இளம் வயதில் எனது குடும்பத்தினரிடமிருந்து எனக்கு ஆதரவு கிடைத்தது. அஜித் டெண்டுல்கர் (சகோதரர்) என் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் முக்கிய பங்கு வகித்தார். நிதின் டெண்டுல்கர் (சகோதரர்) எனது பிறந்தநாளில் எனக்காக ஓவியம் வரைந்து கொடுப்பார். எனது தாயார் எல்ஐசியில் பணிபுரிந்து கொண்டிருந்தார், அப்பா பேராசிரியராக இருந்தார். அவர்கள் எனக்கு சுதந்திரத்தை வழங்கினர். அனைத்து பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளுக்கும் சுதந்திரமாக செயல்பட விடவேண்டும் என்று என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு கிடைத்த அந்த சுதந்திரமான சூழலை என் மகனுக்காகவும் உருவாக்க முயற்சிக்கிறேன். நம்மை நாம் பாராட்டினால்தான் மக்களும் நம்மை பாராட்டுவார்கள். விளையாட்டில்தான் கவனம் இருக்க வேண்டும் என்று என் அப்பா என்னிடம் சொன்ன அறிவுரையை இப்போது நான் அர்ஜுனிடம் சொல்கிறேன். இவ்வாறு சச்சின் பேசினார்.

மேலும் தனது பேச்சின்போது, மனைவி அஞ்சலி பற்றி குறிப்பிட்ட அவர், "ஆஸ்திரேலியா சுற்றுப்பயணத்தின் போது, எனக்கு காயங்கள் ஏற்பட்டதால், இரண்டு கால்களிலும் அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. ஆனால், அஞ்சலி ஆஸ்திரேலியா வந்து அந்த அறுவை சிகிச்சையை ரத்து செய்துவிட்டார். காயங்கள் காரணமாக நான் மிகவும் விரக்தியடைந்தேன். ஆனால் அஞ்சலி என்னை அன்பாக கவனித்துக்கொண்டார்" என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

# உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் இருந்து விலகிய ஆஸி., வேகப்பந்து வீச்சாளர்

**லண்டன்,ஜூன்.05**

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி ஜூன் மாதம் 7ம் தேதி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற உள்ளது. இந்த போட்டியில் இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் சாம்பியன் கோப்பைக்காக மோத உள்ளன.

இந்திய அணியில் ரிஷப் பண்ட், பும்ரா, கே.எல்.ராகுல், ஸ்ரேயஸ் அய்யர் ஆகியோர் இல்லாதது பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. இந்திய அணியில் பேட்டிங்கில் சுப்மன் கில், ரோகித் சர்மா, விராட் கோலி, புஜாரா ஆகியோரை தான் நம்பி உள்ளது.பந்து வீச்சில் ஷமி, சிராஜ், உமேஷ் யாதவ், அஷ்வின், ஜடேஜா ஆகியோர் பலம் சேர்க்கின்றனர்.

டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டி 2019-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. சவுத்தாம்ப்டனில் நடந்த முதல் டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் நியூசிலாந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி சாம்பியன் ஆனது.

தற்போது 2-வது டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியா விளையாட உள்ளது. ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி சாம்பியன் பட்டத்தை வெல்லுமா என ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் இந்த போட்டிக்கான ஆஸ்திரேலிய அணியில் இடம்பெற்றிருந்த ஆஸ்திரேலிய முன்னணி வீரர் வேகப்பந்து வீச்சாளர் ஜோஷ் ஹேசில்வுட் காயம் காரணமாக அணியில் இருந்து விலகுவதாக அறிவிப்பு வெளியாகி உள்ளது. அவருக்கு பதிலாக ஆல்ரவுண்டர் மைக்கேல் நெசர் ஆஸ்திரேலிய அணியில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேகப்பந்து வீச்சாளர் ஹேசில்வுட் இல்லாதது ஆஸ்திரேலியாவுக்கு சற்று பின்னடைவாக கருதப்பட்டாலும் ஸ்டார்க், கம்மின்ஸ் போன்ற வீரர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய அணியின் பந்துவீச்சு குறித்து ஆஸி. முன்னாள் வீரர் கருத்து

**மெல்போர்ன், ஜூன்.05**

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி வரும் 7ம் தேதி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற உள்ளது. இந்த போட்டியில் இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் மோத உள்ளன. கடந்த முறை சாம்பியன்ஷிப் பட்டத்தை தவற விட்ட இந்திய அணி இந்த முறை அதை கைப்பற்றும் முனைப்புடன் உள்ளது.

இந்நிலையில் இந்திய அணியின் பந்து வீச்சு தாக்குதல் ஆஸ்திரேலியாவை விட குறைவானது என நினைக்க வேண்டாம் என ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் கிரேக் சேப்பல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, இந்திய பந்துவீச்சு தாக்குதல் ஆஸ்திரேலியாவை விட குறைவாக இல்லை என்று நினைக்கிறேன். ஷமி ஒரு சிறந்த பந்து வீச்சாளர் மற்றும் ஐபிஎல் தொடரில் சிராஜ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.என்னைக் கேட்டால், இந்தியா இரண்டு ஸ்பின்னர்களுடன் களமிறங்க வேண்டும் என்று நினைக்கிறேன். அஸ்வின் மற்றும் ஜடேஜா இருவரும் இந்தியாவிற்கு அருமையாக விளையாடி உள்ளனர். மேலும் உங்கள் சிறந்த பந்துவீச்சாளர்களுடன் நீங்கள் செல்ல வேண்டும். மேலும் ஜடேஜா அதிக விக்கெட்டுகளை எடுக்காவிட்டாலும், ரன்களை அதிகமாக கொடுக்க மாட்டார். அதுவே வேகப்பந்து வீச்சாளர்களுக்கு தேவையானதை கொடுக்கும். மேலும் ஜடேஜாவின் பேட்டிங் கடந்த சில வருடங்களாக டெஸ்ட் மட்டத்தில் அருமையாக உள்ளது. அஸ்வினிடம் வரும்போது, அவர் இந்த தலைமுறையின் சிறந்தவர்களில் ஒருவர். அவர் ஆழமாக சிந்திக்கிறார், அது அவரை தனித்து நிற்க வைக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### ஒடிசா ரயில் விபத்து எதிரொலி: ரயில்வேயில்

# கவாச் நடைமுறையை அமல்படுத்த கோரி சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல்

### நிபுணர் குழு அமைத்து விசாரிக்கவும் கோரிக்கை

**புது டெல்லி, ஜூன். 05-**

ஒடிசா ரயில் விபத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் நிபுணர் குழு அமைத்து விசாரிக்க கோரியும் இந்திய ரயில்வேயில் கவாச் பாதுகாப்பு நடைமுறை என கூறப்படும் தானியங்கி ரயில் பாதுகாப்பு (ஏ.டி.பி.) நடைமுறையை அமல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் உத்தரவுகள் ஆகியவை பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

ஒடிசா மாநிலம் பாலசோர் மாவட்டத்தில் கடந்த வெள்ளிக் கிழமை இரவில் 3 ரயில்கள் அடுத்தடுத்து மோதி விபத்தில் சிக்கின. நாடு முழுவதும் அதிர்ச்சி ஏற்படுத்திய இந்த கோர விபத்தில் சிக்கி இதுவரை 275 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு, அடையாளம் காணப்பட்டு வருகின்றன. காயமடைந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சம்பவம் நடந்த பகுதிக்கு மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ், மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆகியோருடன் பிரதமர் மோடியும் நேரில் சென்று பார்வையிட்டார். இந்த விபத்தில், பல்வேறு காரணங்கள் கூறப்பட்ட போதிலும், தீவிர விசாரணைக்கு பின்னரே விவரங்கள் வெளிவரும் என கூறப்படுகிறது.

இந்த சூழலில், சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. அதில், ஒடிசாவின் பாலசோரில் ஏற்பட்ட ரயில் விபத்து பற்றி ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் தலைமையில், நிபுணர் குழு ஒன்றை அமைத்து விசாரணை நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டு உள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படுவதற்காக உடனடியாக, இந்திய ரயில்வேயில் கவாச் பாதுகாப்பு நடைமுறை என கூறப்படும் தானியங்கி ரயில் பாதுகாப்பு (ஏ.டி.பி.) நடைமுறையை அமல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் உத்தரவுகள் ஆகியவை பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# புவனேஸ்வரில் சிறப்பு கட்டுப்பாட்டு அறையில் அமைச்சர் உதயநிதி ஆய்வு

**புவனேஸ்வர், ஜூன். 05-**

ஒடிசா மாநிலம் புவனேஸ்வர் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள சிறப்பு கட்டுப்பாட்டு அறையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்.

ஒடிசா ரயில் விபத்தில் காயம் அடைந்தவர்கள் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். விபத்தில் சிக்கியுள்ள தமிழகத்தை சேர்ந்தவர்களை மீட்டு சென்னை அழைத்து வர முதல்வர் மு.க.ஸ்டாலின் உயர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அதன்படி, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் புறப்பட்டு சென்ற அதிகாரிகள் குழுவினர் அம்மாநில அரசு அதிகாரிகளுடன் இணைந்து தமிழக பயணிகள் குறித்து விவரங்களை கேட்டறிந்து அவர்களை பற்றி தகவல்களை சேகரித்து உதவும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சென்னை உள்ளிட்ட மற்ற பகுதிகளை சேர்ந்த பயணிகள் எத்தனை பேர் விபத்தில் சிக்கியுள்ளனர். அவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்கவும் உதவிகள் செய்யவும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அதிகாரிகள் அங்கு முகாமிட்டுள்ளனர்.

இந்த நிலையில், நேற்று ஒடிசா மாநிலம் புவனேஸ்வர் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள சிறப்பு கட்டுப்பாட்டு அறையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். ரயில் விபத்தில் சிக்கிய தமிழர்களை அடையாளம் கண்டறியும் பணியில் தமிழக குழு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

# சென்னை அணியின் நட்சத்திர வீரர் ருதுராஜ் கெய்க்வாட் திருமணம் செய்து கொண்டார்



**புதுடெல்லி,ஜூன்.05**

மகாராஷ்டிரா மாநிலம் புனே நகரைச் சேர்ந்தவர் ருதுராஜ் கெய்க்வாட். இவர் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார். தொடக்க வீரராக களம் இறங்கி விளையாடும் இவர், தனது அதிரடி ஆட்டம் மூலம் ரசிகர்கள் ஆதரவை பெற்றுள்ளார். .பி.எல். போட்டியில் சிறப்பாக விளையாடியதன் காரணமாக இந்திய அணியில் இடம் கிடைத்தது. 7-ந்தேதி தொடங்கும் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான இந்திய அணியில் பேக்அப் தொடக்க வீரராக தேர்வு செய்யப்பட்டிருந்தார். ஆனால் திருமணம் செய்ய இருப்பதால், கலந்து கொள்ள முடியாது என்று பிசிசிஐ-யிடம் கேட்டுக் கொண்டார். பிசிசிஐ-யும் அனுமதி அளித்தது.

இந்த நிலையில் நேற்று ருதுராஜ் கெய்க்வாட்டுக்கு திருமணம் நடைபெற்றது. உட்கர்ஷா பவார் என்பவரை திருமணம் செய்து கொண்டார். உட்கர்ஸ பவார் கிரிக்கெட் வீராங்கனை என்பதை குறிப்பிடத்தக்கது.

ருதுராஜ் கெய்க்வாட்டுக்கு ரசிகர்கள் , கிரிக்கெட் வீரர்கள் என பலரும் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். திருமண புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகிறது.

இதனைத் தொடர்ந்து தவான் உள்ளிட்ட கிரிக்கெட் வீரர்கள் ருத்துராஜுக்கு வாழ்த்துகள் தெரிவித்தனர்.

திருமண நிகழ்வில் ஷிவம் துபே உள்ளிட்ட சில சிஎஸ்கே வீரர்கள் கலந்து கொண்டனர். சென்னை சூப்பர் கிங்ஸ் சமூகவலைதள பக்கமும் ருத்துராஜுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளது.

சிஎஸ்கே அணியின் தொடக்க ஆட்டக்காராக உள்ள ருத்துராஜ் அந்த அணிக்கு சிறப்பான பங்களிப்பை அளித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் இகா ஸ்வியாடெக் முன்னேற்றம்



**பாரீஸ்,ஜூன்.05**

பிரெஞ்சு ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு 4-வது சுற்றுக்கு போலந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக் முன்னேறியுள்ளார்.

பிரெஞ்சு ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடைபெற்று வருகிறது. ஆடவர் ஒற்றையர் பிரிவு 3-வது சுற்றில் நார்வேயின் காஸ்பர் ரூடும், சீன வீரர் ஜாங் ஜிசென்னும் மோதினர். இதில் காஸ்பர் ரூட் 4-6, 6-4, 6-1, 6-4 என்ற செட் கணக்கில் ஜாங் ஜிசென்னை வீழ்த்தி 4-வது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆடவர் ஒற்றையர் 3-வது சுற்று ஆட்டங்களில் ஜப்பானின் யோஷிடோ நிஷியோகா, டென்மார்க்கின் ஹோல்கர் ரூனே, சிலி வீரர் நிக்கோலஸ் ஜாரி, அர்ஜென்டினா வீரர் தாமஸ் மார்ட்டின் எட்செவேரி உள்ளிட்டோரும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் கண்டனர்.

மகளிர் 3-வது சுற்று ஆட்டத்தில் ஸ்பெயின் வீராங்கனை சாரா சோரிபெஸ் டோர்மோவும், கஜகஸ்தான் வீராங்கனை எலீனா ரைபாகினாவும் மோத இருந்தனர். இதில் ஆட்டத்திலிருந்து எலீனா ரைபாகினா விலகிக் கொண்டதால், சாரா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

மற்றொரு 3-வது சுற்று ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனை கோகோ கவுஃப் 6-7 (5), 6-1, 6-1 என்ற செட் கணக்கில் ரஷ்ய வீராங்கனை மிர்ரா ஆன்ட்ரீவாவை வீழ்த்தினார். மற்றொரு ஆட்டத்தில் தரவரிசையில் முதலிடத்தில் இருப்பவரும் போலந்து நாட்டு வீராங்கனையுமான இகா ஸ்வியாடெக் 6-0, 6-0 என்ற நேர் செட் கணக்கில் சீனாவின் வாங் ஜின்யுவை சாய்த்தார்.

# வரும் 8-ம் தேதி வேலூரில் மத்திய அரசின் சாதனை விளக்க கூட்டம்

## மத்திய அமைச்சர் அமித்ஷா சிறப்புரை

வேலூர், ஜூன். 5-

வேலூரில் மத்திய அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் வரும் 8-ம் தேதி (வியாழக்கிழமை) நடைபெறுகிறது. இதில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்று பேசுகிறார்.

பாராளுமன்ற தேர்தலுக்கு பா.ஜ.க. முழு வேகத்தில் தயாராகி வருகிறது. இதன் ஒரு பகுதியாக மத்திய அரசின் 9 ஆண்டுகால சாதனைகளை விளக்கி நாடு முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் தீவிரமாக நடந்து வருகிறது. தமிழகத்திலும் மத்திய அரசின் சாதனைகளை விளக்கி பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட உள்ளன.

அதன்படி வேலூரில் மத்திய அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் வரும் 8-ம் தேதி (வியாழக்கிழமை) நடைபெறுகிறது. இதில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்று பேசுகிறார்.

அமித்ஷா வேலூருக்கு வருகை தர இருப்பது மாவட்ட பா.ஜ.க.வினர் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து பா.ஜ.க. மாநில பொதுச்செயலாளர் கார்த்திகாயினி துணைத்தலைவர் நரேந்திரன். மாவட்டத் தலைவர் மனோகரன் தலைமையில் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் வேலூர் கிரீன் சர்க்கிள் பகுதியில் நடந்தது. கூட்டத்தில் மத்திய அரசின் 9 ஆண்டு கால சாதனைகளை விளக்கி வேலூரில் வரும் 8-ம் தேதி பொதுக்கூட்டம் நடக்க இருக்கிறது. இதில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்க உள்ளார். அதற்கு ஏற்றவாறு களப்பணியில் கட்சியினர் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.



ஒடிசா மாநில முதல்வர் நவீன் பட்நாயக்கை, தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று சந்தித்து, தமிழ்நாட்டை சேர்ந்த பயணிகளின் பாதுகாப்பு, மீட்புப்பணிகள் மற்றும் மருத்துவ உதவிகள் குறித்து கலந்துரையாடினார். அருகில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், கூடுதல் தலைமைச்செயலாளர் க.பணீந்திரரெட்டி, வருவாய்த்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் குமார் ஜெயந்த் ஆகியோர் உடனிருந்தனர்.

# ஒடிசா விபத்தில் சிக்கிய 3 ரயில்களின் ஓட்டுனர்கள் நிலைமை என்ன?

## தென்கிழக்கு ரயில்வே அதிகாரி பேட்டி

காரக்பூர், ஜூன்.5-

ஒடிசா ரயில் விபத்தில் சிக்கிய 3 ரயில்களின் லோகோ பைலட்டுகளின் நிலைமை என்ன என்பது குறித்து தென்கிழக்கு ரயில்வே அதிகாரி பேட்டியளித்துள்ளார்.

இதுகுறித்து தென்கிழக்கு ரயில்வேயின் காரக்பூர் கோட்ட முதுநிலைப் பிரிவு வணிக மேலாளர் ராஜேஷ் குமார் கூறுகையில்,

படுகாயமடைந்த கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயிலின் லோகோ பைலட், உதவி லோகோ பைலட், காவலாளி மற்றும் பெங்களூரு - ஹவுரா எக்ஸ்பிரஸ் ரயிலின் லோகோ பைலட், காவலர்கள் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தில் சிக்கிய சரக்கு ரயிலின் லோகோ பைலட், பாதுகாவலர் ஆகியோர் லேசான காயங்களுடன் உயிர் தப்பினர். அவர்களும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.



ஒடிசாவின் பாலசோர் பக்கீர் மோகன் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பயணிகளிடம், தமிழக அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் நலம் விசாரித்து, உரிய சிகிச்சை வழங்க பாலசோர் மாவட்ட நிர்வாகம் மற்றும் மருத்துவர்களிடம் கேட்டுக் கொண்டனர்.

# கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டது எப்படி?

## இந்திய ரயில்வே துறை விளக்கம்

புதுடெல்லி,ஜூன்.5-

கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டது எப்படி?.. என்ற விளக்கத்தை இந்திய ரயில்வே துறை அளித்துள்ளது.

இதுகுறித்து ரயில்வே வாரியத்தின் செயல்பாடு மற்றும் வணிக மேம்பாட்டு உறுப்பினர் ஜெயா வர்மா கூறியதாவது,

விபத்து ஏற்பட்ட பஹனகா பகுதியில் 4 ரயில் வழித் தடங்கள் உள்ளன. இதில் இரண்டு பிரதானமான ரயில் வழித்தடங்கள். மற்ற இரண்டும் லூப் தடங்கள் ஆகும். ரயிலை நிறுத்த வேண்டும் என்றால், லூப் தடத்தில்தான் நிறுத்துவோம்.

விபத்தின் போது, இரண்டு விரைவு ரயில்களும் ரயில் நிலையத்தின் வழியாக வெவ்வேறு திசைகளில் சென்று கொண்டிருந்தன. ரயில் நிலையங்களைப் பொறுத்தவரை, லூப் லைன்கள் முக்கிய வழித்தடங்கள் நடுவிலும், முக்கிய வழித்தடங்களின் இருபுறமும் இருக்கும்.

விபத்தின்போது, நிற்க வேண்டிய இரண்டு எக்ஸ்பிரஸ் ரயில்களுக்கு வழி விட இரண்டு ரயில்கள் நிறுத்தப் பட்டன. அப்போது லூப் லைனில் சரக்கு ரயில் காத்திருந்தது. கோரமண்டல் மற்றும் பெங்களூரு - ஹவுரா விரைவு ரயிலுக்கான இரண்டு முக்கிய பாதைகள் அகற்றப்பட்டு, எல்லாம் தயாராக இருந்தது.





சிக்னலும் பச்சை அளிக்கப்பட்டது. பச்சை சமிக்ஞை என்பது ஓட்டுநருக்கு முன்னோக்கிச் செல்லும் பாதை தெளிவாக உள்ளது அவர் அதிகபட்ச வேகத்தைப் பயன்படுத்தலாம் என்பதையே குறிக்கும். அந்த இடத்தில் கோரமண்டலுக்கான அனுமதிக்கப்பட்ட வேகம் மணிக்கு 130 கி.மீ. அங்கு கோரமண்டல் ரயில் மணிக்கு 128 கிமீ வேகத்தில் சென்றிருக்கிறது.

அதே நேரத்தில் பெங்களூரு - ஹவுரா அனுமதிக்கப்பட்ட வேக வரம்பிற்குள் மணிக்கு 126 கி.மீ .வேகத்தில் சென்றிருக்கிறது. ரயில்கள் அதிவேகத்தில் செல்லவில்லை. சிக்னல் பச்சை நிறத்தில் இருந்ததாலேயே ரயில்கள் சென்றுள்ளன. முதற்கட்ட அறிக்கையில் சில சிக்னல் கோளாறுகளால் விபத்து ஏற்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை நான் அதைப் பற்றி கருத்து தெரிவிக்க மாட்டேன். ஆனால் மூன்று ரயில்கள் மோதியதாகக் கூறப்படுவதில் உண்மை இல்லை. இதில் கோரமண்டல் ரயில் மட்டுமே விபத்தை எதிர் கொண்டது.

கோரமண்டல் ரயில்தான் லூப் லைனில் நின்று கொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதியது. ரயில் அதன் அதிகபட்ச வேகத்தில் இருந்ததால் இதன் தாக்கம் மிகப்பெரியதாக மாறியுள்ளது. சரக்கு ரயில் கனமானது மற்றும் இரும்பு தாது கொண்டது. இதனால் சரக்கு ரயிலுக்கு ஒன்றும் ஆகவில்லை.

இந்த மோதலின் முழு பாதிப்பு கோரமண்டல் ரயிலுக்குத்தான் ஏற்பட்டது. கோரமண்டலின் பெட்டிகள் எல்.ஹெச்.பி.யால் ( Linke Hofmann Busch coach- ரயில் பெட்டிகளை தயாரிக்கும் ஜெர்மன் நிறுவனம்) ஆனவை. இவை மிகவும் பாதுகாப்பானவை. ஒன்றோடு ஒன்று மோதி விழாது. ஆனால் இந்த விபத்தில் முழு பாதிப்பும் கோரமண்டல் ரயில் பக்கம் வந்ததால், எந்த தொழில்நுட்பத்தினாலும் அதனைக் காப்பாற்ற முடியவில்லை.

கோரமண்டல் ரயிலின் தடம் புரண்ட பெட்டிகள், யஷ்வந்த்பூர் ஹவுரா கடந்து செல்லும் மற்ற முக்கிய பாதையில் விழுந்ததால் யஷ்வந்த்பூர் ரயிலின் கடைசி சில பெட்டிகளும் பாதிப்படைந்தன.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



சென்னை, டாக்டர் எம்.ஜி.ஆர். மத்திய ரயில் நிலையத்தில் நேற்று, அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று, சிறப்பு ரயில் மூலம் சென்னைக்கு வந்த ஒடிசா ரயில் விபத்தில் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு தேவையான மருத்துவ முதலுதவி அளித்து, தேவைப்படுகிறவர்களுக்கு ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அருகில் கூடுதல் தலைமைச்செயலாளர் எஸ்.கே.பிரபாகர், மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச்செயலாளர் ககன்தீப்சிங் பேடி ஆகியோர் உடனிருந்தனர்.

### மத்திய யுனானி ஆராய்ச்சிக்கழக

# தலைமை இயக்குனர் ஜெனரலாக ஜஹீர் அஹ்மத் பொறுப்பேற்பு

சென்னை,ஜூன்.5-

மத்திய யுனானி ஆராய்ச்சி கழக தலைமை இயக்குனர் ஜெனரலாக ஜஹீர் அஹ்மத் தியமிக்கப்பட்டுள்ளார். இவர் சென்னை ராயபுரத்தை சேர்ந்தவர்.

டெல்லியில் உள்ள மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மத்திய யுனானி ஆராய்ச்சி கழகத்தின் புதிய தலைமை இயக்குநர் ஜெனரலாக தமிழகத்தை சேர்ந்த டாக்டர் என். ஜஹீர் அஹ்மத் பொறுப்பேற்றுக் கொண்டார். தமிழகத்தை சேர்ந்த ஒருவர் 40 ஆண்டுகால வரலாற்றில் தலைமை இயக்குநர் பதவியை அடைவது இதுவே முதல் முறையாகும்.

சென்னை ராயபுரம் மேற்கு மாதா கோயில் தெருவில் மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் யுனானி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. இங்கு துணை இயக்குனராக ஜஹீர் அஹ்மத் பதவி வகித்து வந்தார். இவர் ராயபுரத்தை பூர்வீகமாக கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரயில் விபத்து: தமிழகத்தை சேர்ந்தவர்கள் யாரும் காயமுற்று சிகிச்சை பெறவில்லை

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பேட்டி

சென்னை,ஜூன்.5-

ஒடிசா ரயில் விபத்து சம்பவத்தில் தமிழகத்தை சேர்ந்தவர்கள் யாரும் காயமுற்று சிகிச்சை பெறவில்லை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை எழிலகத்தில் நிருபர்களிடம் வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமசந்திரன் கூறியதாவது:-

ஒடிசா ரயில் விபத்தில் இறந்தவர்களில் 70 சடலங்கள் அடையாளம் காணப் பட்டுள்ளதாக கூறி இருக்கின்றனர். அதன்படி, இறந்து அடையாளம் காணப்பட்டவர்களில் தமிழகத்தை சேர்ந்தவர்கள் எவரும் இல்லை என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையிலான குழு தெரிவித்துள்ளது.

மேலும், விபத்தில் காயமுற்று சிகிச்சை பெற்று வரும் நபர்களது விபரங்களை இதுவரை பரிசீலனை செய்ததில் தமிழகத்தை சேர்ந்தவர்கள் யாரும் காயமுற்று சிகிச்சை பெறவில்லை என்ற விவரமும் தெரியவந்துள்ளது.

ஹவுராவிலிருந்து சென்னை நோக்கி வந்த கோரமண்டல் விரைவு ரயிலில் பயணம் செய்ய முன்பதிவு செய்த பயணிகளது பட்டியல் தென்னக ரயில்வேயிலிருந்து பெறப்பட்டு அதில் தமிழ்ப் பெயர் கொண்டவர்களையும், தமிழகத்தில் இருப்பிட முகவரி அளித்துள்ள 127 நபர்களது பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை தயாரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள 127 பேரை மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து தொடர்பு கொள்ளப்பட்டதில், 119 நபர்கள் பாதுகாப்பாக உள்ளதாக தெரியவந்துள்ளது. எஞ்சிய 8 நபர்களது செல்பேசி மற்றும் முகவரி இல்லாத நிலையில் அவர்களை தொடர்புகொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், அந்த 8 பேரின் முகவரிகளை ரயில்வே நிர்வாகத்திடம் வாங்கி அவர்களின் உறவினர்களை தொடர்பு கொண்டு பேச நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒடிசாவில் முகாமிட்டுள்ள மீட்புக் குழுவும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கட்டுப்பாட்டு அறையும் இணைந்து, தொடர்பு கொள்ள இயலாத நபர்களுடைய விபரங்களை சேகரிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்புகொள்ள இயலாத நிலையில் உள்ள கீழ்கண்ட 8 நபர்களது உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர், இவர்கள் குறித்த தகவல் அறிந்திருப்பின் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு எண்களில் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தொடர்பு கொள்ள முடியாத நபர்கள் பட்டியல் நாரகணி கோபி (34), கார்த்திக்(19), ரகுநாத்(21), மீனா(66), எ. ஜெகதீசன்(47), கமல் (26), கல்பனா(19), அருண் (21). வருவாய்த்துறை உதவி எண்கள் கட்டணமில்லா தொலைபேசி - 1070, செல்பேசி - 9445869843

# நீர்வரத்து அதிகரிப்பு எதிரொலி: மேட்டூர் அணை நீர்மட்டம் 103.73 அடியாக உயர்வு

சேலம்,ஜூன். 05-

நீர்வரத்து அதிகரிப்பை தொடர்ந்து மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று 103.73 அடியாக உயர்ந்துள்ளது.

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழையை பொறுத்து, ஒகேனக்கல் மற்றும் மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரிப்பதும், சரிவதுமாக இருந்து வருகிறது. ஒகேனக்கல் காவிரியில், நீர்வரத்து கடந்த 2 நாட்களாக 1500 கன



அடியாக வந்த நிலையில் நேற்று முன்தினம் 2 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது.

அதே சமயம், மேட்டூர் அணைக்கான நீர்வரத்து நேற்று முன்தினம் 1804 கன அடியாக இருந்த நிலையில், நேற்று காலை விநாடிக்கு 2267 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக, விநாடிக்கு 1500 கனஅடி வீதம் தண்ணீர் காவிரி ஆற்றில் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர் மட்டம் நேற்று காலை 103.73 கனஅடியாக உயர்ந்துள்ளது.